விலை ரூபா 5.00

# ஈழநாடு வார மலர்

மலர் 27 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 18 இதழ் 148
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 2 - 7 - 1995

## தெகிவளையில் நேற்று மிருகக்காட்சிச்சாலையில் தகரக் குண்டு வெடிப்பு!

(கொழும்பு)

தெகிவளை மிருகக் காட்சிச் சாலையில் குண்டு ஒன்று வெடித்துள்ளது. நேற்றுக் காலைஇக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

வெடித்த குண்டு ஒரு சிறு தகரக் குண்டு என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிறிய பெட்டியொன்றில் குண்டு ஒன்று காணப்பட்டதாகவும் இதனை மிருகக் காட்சிச் சாலை ஊழியர் ஒருவர் எடுத்து நீர்த்தாங்கி ஒன்றினுள் எறிந்தபோது தண்ணீர் தாங்கியினுள் குண்டு வெடித்ததால் தண்ணீர்

(10-ம் பக்கம் பார்க்க)

## வெடிமருந்துடன் வந்த ஜீப்வண்டி கண்ணிவெடியில் சிதறியது; 2ராணுவம்பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியானார்கள். நால்வர் படுகாயமடைந்தனர்.

இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ஜீப் ஒன்றில் வெடிமருந்துகளை இராணுவத்தினர் கொண்டு சென்றபோது விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் ஜீப் வண்டி சிக்கியது.

வாகரைப் பகுதியில் தேடு

(2ம் பக்கம் பார்க்க)

## நிபந்தனையுடனான பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றமாட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

நிபந்தனையுடனான எவ்வித பேச்சுக்களிலும் விடுதலைப் புலிகள் பங்குபற்றமாட்டார்கள் என அதன் உத்தியோக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப்புலிகளை இராணுவ அழுத்தங்கள் மூலம்

(2ம் பக்கம் பார்க்க)

## போரில் படையினருக்கு வழிகாட்ட யுத்த ஆலோசனைச்சபை நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தம் குறித்து பாதுகாப்புத்துறைக்கு ஆலோசனை வழங்கவென ஒரு குழுவை ஜனாதிபதி சந்திரிகா அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் முன்னாள் படைத் தளபதிகள், பொதுமக்கள் என பல்வேறு துறைகளையும் சேர்ந்த பதின்நான்கு பேரை இக் குழுவின் அங்கத்தவர்களாக ஜனாதிபதி நியமித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் புலிகளுடனான போரில் படையினருக்கு ஏற்பட்டு வரும் பின்னடைவுகளை தடுக்கவும் யுத்தத்தில் வெற்றிபெறவுமே இந்த ஆலோசனைக்குழு நியமிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் கடற்

(10-ம் பக்கம் பார்க்க)



வட தமிழீழத்தில் அரசாங்கம் விதித்த பொருளாதாரக் கட்டுப்பாடு மக்களுக்கு அவசியம் தேவையான மருந்துவகைகளும் அவர்களுக்கு கிடைக்காவண்ணம் செய்துள்ளது. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட மகனைஒரு தாய் முச்சக்கர வண்டியில் தள்ளிச் சென்று மருந்துவகை பெற்று வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. படம்: சுபாஸ்.

## ★ தமிழ் கிராமத்தினுள் நுழைந்து மட்டுநகரில் ராணுவம் கொடூரம்

# 10 அப்பாவித் தமிழர் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உட்படப் பத்து அப்பாவித்தமிழ் மக்கள் இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 4-30 மணியளவில் மட்டக்களப்பு காந்தாமலை என்ற இடத்தில் வாழும் தமிழ்மக்கள்மீது இராணுவத்தினர் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இராணுவத்தினர்நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் பத்து பொதுமக்கள் பலியானார்கள் இதனையடுத்து இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டனர்.

ச. தியாகராசா(60 வயது), இவரது பிள்ளைகளான தி. வாணி (24 வயது), தி. கீத்தா (17 வயது), தி.புஸ்பராசா( 15 வயது) ஆகியோரும் மற்றும் முருகன், வாகனேரியைச் சேர்ந்த மு. கலா (8 வயது), தி. ராசா (17 வயது, கிரான்) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். மேலும் இருவரின் விபரங்கள் கிடைக்கவில்லை.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தியாகராசாவின் மனைவியான பரம்சோதி, முருகனின் மனைவியான பாக்கியம் ஆகியோர் இராணுவத்தினரின் தாக்குதலில் படுகாயமடைந்தனர். (ரி-சி)

## படையினருக்கு உதவ தேசிய துணைப்படை

(கொழும்பு)

யுத்தத்தில் படையினருக்கு உதவுவதற்கென தேசிய துணைப்படை ஒன்றை அமைக்க ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

பத்தாயிரம் பேரைக் கொண்டதாக இத் தேசிய துணைப்படை உடனடியாக அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறுகியகாலப் பயிற்சியுடன் யுத்தவேளையில் படையினருக்கு பல்வேறு துறைகளிலும் உதவும் பணியில் இத் துணைப் படையினர் ஈடுபடுத்தப் படுவர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. கி-சி

✶ தரமான சுவையான ஐஸ்கிறீம்,
✶ குளிர்பானங்கள் மற்றும்
✶ சிற்றுண்டி வகைகளுக்கும்
✶ ஸ்பெஷல் நட்ஸ் வனிலா
✶ புருட்சலட் ✶ ஐஸ்கிறீம்
✶ கிறீம் சர்பத் ஆகியவற்றுக்கும்

ராஜா குளிர் சுவையகம்
36, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.
(ஏ-5058)

## வரி விளம்பரம்

### O/L MATHS' 95

Distinction, Credit பெறு பேறுடைய விசேட பயிற்சிகளுடன் (ஆண்டு 9, 10) உட்பட B. sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, சிவன்கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. சி-1530

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, கலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)

### அப்பியாசக் கொப்பி

துணிகளின் வெண்மைக்கு நுரைவளம் மிக்க மில்க்வைற் சோப், மில்க்வைற் சலவைப்பவுடர், மேலுறைகள் அல்லது வெற்றுப்பக்கற் 25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பி பெற்றுக்கொள்ளுங்கள் -

"மில்க்வைற்"

[ஏ-5048)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-07-02**
ஞாயிறு இரவு

8-02 கரும்புலிகள் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி ''மனித தியாகத்தில் இமையத்தைதொட்டவர்கள்''
8-30 செய்திகள்
8-40 தொடர்நாடகம் பொன் கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கை மண்'' அங்கம் 01

**1995 - 07 - 03**
திங்கள் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணிவரை நீங்கள் கேட்டவை தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-07-02**
ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-12 மழலைகளுக்காக
5-30 கதம்பம்
6-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## நிபந்தனையுடனு்ன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர முடியுமென அரசு தவருன கணிப்பீட்டிலுள்ளது. மேலும் இராணுவ ரீதியில் பலமானதொரு நிலையிலிருந்து கொண்டு புலிகளுடன் பேச்சு நடத்தவும் அரசு முனைகிறது: சமாதானத்தை ஏற்படுத்துவதற்குயுத்தம் அவசியமானது எனவும் அரசு கூறி வருகிறது.

எனவே இவ்வாருன நிபந்தனைகளின் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தை எதிலும் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளமாட்டார்கள் என்பதை அரசுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேம்

தற்போதைய அரசியல்-இராணுவ நிலை பற்றி அப்பேச்சாளர் கூறுகையில்;

மண்டைதீவு முகாம் மீதான புலிகளின் தாக்குதல், விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு படை என்பதை அரசுக்கு உணர்த்தியிருக்கும். மேலும் யாழ்ப்பாணத்தி மீது படையெடுக்க முனையும் எந்தத் திட்டமும் பேராபத்தாக முடியும் என்பதையும் அரசுக்கு உணர்த்தும்.

வெளியுறவு அமைச்சர் லஷ்க்மன் கதிர்காமர் சர்வதேச சமூகத்திற்கு இலங்கையில் இனப்பிரச்னையைத் தீர்த்து சமாதானத்தை எட்ட யுத்தம் தேவை எனக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அவர்கள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படவேண்டும் எனவும் கூறிவருகிருர். இது இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்தும் அரசின் அபத்தமான செயலாகும். எனினும் இவ்வாருன கோட்பாடுகளை மேற்கத்திய அரசுகள் ஏற்றுக் கொள்ளுமென நாம் நினைக்கவில்லை.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முயல்வது முடியாதொரு காரியமென அரசு உணர வேண்டும், நடக்க முடியாத இந்த நிகழ்வு நடந்தாலும் பலவீனமானதொரு நிலையில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகள் சமாதானப்பேச்சுக்கு செல்லமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார். -சி

## மலேரியாவால் பாதிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை. வசந்தபுரம், துண்டி, எழிலூர், வளன்புரம், மணியம்தோட்டம், உதயபுரம், அரியாலைப்பகுதிகளில் மலேரியா நோயினுல் அநேகர் பாதிக்கப்பட்டுள்ளனர் [54

## வெடிமருந்துடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் வேட்டை நடத்திவிட்டு ரோந்துசென்றுகொண்டிருந்த ஜீப் வண்டியே கண்ணிவெடியில் சிக்கியதாக தெரியவருகிறது. ரி-சி

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆனி உத்தர திருவிழாவை முன்னிட்டு எதிர் வரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஸ்ரீ சிவகாமி சமேத நடராஜபெருமானுக்கு ஸ்பன அபிஷேகமும். தொடர்ந்து ஆராதனை தரிசனத்துடன் வீதி உலா வருதலும் நடைபெறும்.

## இலங்கை வங்கிக்கிளை இடமாற்றம் இல்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி பருத்தித்துறைகிளை தற்போது இயங்கும் கட்டிடத்தில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றப்படமாட்டாது என்றும் இக்கிளையினை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய கட்டாயம் ஏதும் தற்போது எழவில்லை என்றும் இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். -ரி

## இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபை, மணிவாசகர் குருபூசை தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவிலில் திருவாசக முற்றேதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

0 0 0

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசையும், திருவாசகம் முற்றேதலும், விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளும் இடம்பெறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் வழக்கம்பரை மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். -154

0 0 0

(அரியாலை)

மன்னூர் மாவட்டத்திலுள்ள மருதமடு திருப்பதியிலுள்ள புனித செபமாலை அன்னையின் ஆடித் திருவிழா இன்று கூட்டுத் திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெறுகிறது. -59

0 0 0

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மாதர் அபிவிருத்தி சங்கங்களின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும்,

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசா கலந்து கொள்வார். -170

0 0 0

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 11ம் திகதி யன்று ரதோற்சவமும் 12-ம் திகதியன்று தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. -72

0 0 0

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுக் கூட்டம் இன்று 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது- -72


# பயிற்சி வினுத்தாள்கள்

(விடைகளுடன்)

இரண்டாம் தவணைப் பரீட்சைக்குத்தயாராகும்
ஆண்டு- 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L
மாணவர்களுக்காக எல்லா பாடங்களுக்குமான
பயிற்சி வினுத்தாள்கள் 3-7-95
முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**BOND புத்தக நிறுவனம்**
58, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-5052]

# A/L 95

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு

| | |
|---|---|
| இரசாயனவியல் | பொருளியல் |
| பௌதிகவியல் | கணக்கியல் |
| தாவரவியல் | வர்த்தகம் |
| விலங்கியல் | அளவையியல் |
| தூயகணிதம் | தமிழ் |
| பிரயோககணிதம் | புவியியல் |
| இந்து நாகரிகம் | கிறிஸ்தவம் |
| இந்துசமயம் | அரசியல் |

நாடகமும் அரங்கியலும்

ஆகிய பாடங்களுக்குரிய மாதிரி வினுத்தாள்கள் விடைகளுடன் 3-7-95 முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இப் பாடங்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு 1, 2ம் திகதிகளில் நடைபெறும்.

**BOND புத்தக நிறுவனம்**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஏ-5051)

# விற்பனையாகின்றது!

வேலணை சோதிடர் V. A. சிவராசாவின்
★ சனீஸ்வர மாற்றம்
உங்களுக்கு எப்படி?
★ விண்ணில் வியாழ மாற்றம்
மண்ணில் உங்கள் யோக பலன்
152 B, அரசடிவீதி, கந்தர்மடம். [சி-1537]

# புதிய வகுப்புகள்

BASIC
LOTUS
SHORT - HAND
TYPING

ஆரம்பம்: 03-07-95

C. I. M. A. I. A. B நடைபெறுகின்றன
உறுதியான கல்வியைப் பெற
**School of Business Administration**
16, 3rd CROSS STREET
JAFFNA.
(சி-1538)

நாடக ஆர்வலர்களே!
நாமிருக்கும் நாடு நமது
நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில்
**இன்று (02-07-95)**
மேடையேற்றப்பட இருந்த
# நாமிருக்கும் நாடு நமது
நாடகம் தவிர்க்க முடியாத
காரணங்களால் இன்று நடைபெறமாட்டாது
மேடையேறும் புதிய திகதி பின்னர்
அறிவிக்கப்படும்
எனவே நீங்கள் வாங்கிய நுழைவு
சீட்டுக்களை கவனமாக வைத்திருங்கள்

தமிழீழ
பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
[ஏ-5060]

யாழ்ப்பாணம் நல்லூர் நூலகம்.

## கப்பல் ஒப்பந்த - பொய்த்தகவல்கள்

# இராணுவ மூலோபாயம் காலக்கேடு

ஐ. தே. க. ஆட்சியில் நடந்த போர் தளபாட, கப்பல், ஆகாய விமான, கெலிகளின் கொள்முதலில் உயர் இராணுவ அதிகாரிகள் கமிஷன், தரகு போன்றவற்றைப் பெற்றதுபோல சந்திரிகாவின் ஆட்சியிலும் நடைபெறுகிறதாம். இதன் காரணமாக

### வாரசாரம்

தரம் குறைந்த பாவனைக் கொவ்வாத ஆயுதங்கள், கப்பல்கள் போன்றவை வாங்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் கூறுகின்றன.

### கப்பல் ஒப்பந்தம்

கடற்படைக்குத் தெரியாது சிறிலங்கா இராணுவம் அண்மையில் குத்தகைக்குப் பெறப்பட்ட கப்பல், சிப்பாய்களையும் இராணுவ உபகர



ணங்களையும் தரை இறக்கப் பொருத்தமற்றது என்றும் கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதலுக்கு அல்லது நீரடி நீச்சல் பிரிவின் தாக்குதலுக்கோ சுலபமாக இலக்காகக் கூடியதென்றும் கூறப்படுகிறது. இந்தக்கப்பல்கடந்த மாதம் 15-ந் திகதி திருமலைக்குக் கொண்டுவரப்பட்ட போது அக்கப்பலைக் கொண்டு வந்தவர்கள் அதை ஆழம் குறைந்த பகுதிகளுக்குக் கொண்டுசெல்லும் அனுபவம் தமக்கில்லை என்று தெரிவித்தனர். இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சு ஒப்பந்தத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு இராணுவத்துக்கு தெரிவித்துள்ளது. அவசர நடவடிக்கைக்காக கொண்டுவரப்பட்ட கப்பலும் திரும்பிப் போகிறது. இத்தவறு தற்செயலாக நடந்ததா அல்லது திட்டவட்டமாக கமிசன் பெறுவதற்காக நடத்தப்பட்ட செயலா என்பது அதில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தான் தெரியும்.

### பொய்த் தகவல்கள்

அண்மையில் கிழக்கிலும் வடக்கிலும் நடைபெற்று வரும் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்களால் மூளை மழுங்கிப் போயிருக்கும் அரசு பொய்த்தகவல்களை வெளியிடுவதில் ஈடுபட்டு வருகிறது. இத்தந்திரத்தை முதலில் பாவித்தவர் மறைந்த அத்துலத்முதலியாகும். அவர் லங்கபுவத் என்ற செய்தி ஸ்தாபனத்தை உருவாக்கிப் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டார். தற்போதும் போர்முனைகளில் பலியாகும் சிறிலங்காப் படையினரின் எண்ணிக்கையைச் சமப்படுத்துவதற்காக புலிகளும் பெரும் தொகையில் உயிரிழந்ததாக பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க இவ்வார வெற்றிகரமான மண்டைதீவுத் தாக்குதல் பற்றி பி. பி. சி. தனது செய்தியறிக்கையில் போர்முனையில் தளபதிகள் சூசையும் சொர்ணமும் உயிரிழந்தனர் என்று ஒரு பொய்யைச் சொல்லியது. அத்தகவல் சிங்கள அறிக்கையாளர்களால்தான் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

### இராணுவ மூலோபாயம்

விடுதலைப்புலிகளின் வெற்றிகரமான மண்டைதீவு தாக்குதல் சிறிலங்கா அரசின் இராணுவ மூலோபாயத்தையே மாற்றியமைக்கவேண்டிய நிலையை உருவாக்கியுள்ள வேளையில் சந்திரிகா, தான் எண்ணியபடி வடக்கில் ஒரு பெரும் தாக்குதலை நடத்துவாரா?

**ச. தியாகராசா**

### காலக்கேடு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு அரசு குறித்துள்ள யூலை 15 காலக்கெடு நெருங்கும் இவ்வேளையில், உண்மையில் மாற்றத்தைச் செய்ய விரும்பாத சந்திரிகா சிங்கள மக்களை தாஜாபண்ணி ஏமாற்றுவதற்கு அவர்களைத் திசை திருப்புவதற்கு தோல்வி ஏற்படும் என்று தெரிந்துகொண்டும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களை கைப்பற்ற முனையத்தான் செய்வார். இதற்குள் பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் காலக்கெடுவுக்குள் மாற்றத்தைச் செய்ய முடியாவிட்டால் புதிய காலகெடு ஒன்றை அறிவிக்குமாறு சந்திரிகாவுக்கு நெருக்குதல் கொடுக்கிறார்கள். குறைந்த பட்சம் அவ்விதமாவது செய்யாவிட்டால் அரசுமீது மக்கள் கொண்டுள்ள நம்பகத் தன்மையை இழக்கவேண்டிஏற்படும் என்று அக்கட்சிகள் தெரிவித்துள்ளன. மூளை குழம்பிப்போயிருக்கும் சந்திரிகா என்னத்தை செய்யப் போகிறாரோ?



### தொண்டமான்

கடந்த தேர்தலில்பொதுசன ஐக்கியமுன்னணி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. பெருந்தோட்டங்களின் இலாபத்தில் பத்து வீதம் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும், லயன்கள் தொழிலாளர்களுக்கு உரிமையாக்கப்படவேண்டும், தோட்டங்களை தனியார்மயப்படுத்துவதையும் நீண்டகால குத்தகைக்குக் கொடுப்பதையும் கட்டுப்படுத்தவேண்டும் என்ற வாறான தொழிலாளர்களின் பல கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறு விரக்தி அடைந்த தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் பெருந்தோட்ட தொழில்துறையைச் சேர்ந்த முக்கிய தொழிலாளர் சங்கங்கள் மூலம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இம்மாதம் 11-ந் திகதி குதிக்கவுள்ளனர்.

(10ம்பக்கம் பார்க்க)

நமது நோக்கு

## நிறைவேற்று ஜனாதிபதி முறை

காலியில் நடந்த ஒரு கல்லூரியின் பவளவிழாவில் கலந்துகொண்டு பேசிய ஜனாதிபதி சந்திரிகா நிறைவேற்று ஜனாதிபதி முறையின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தாத ஒரே ஒரு ராஜ்யத் தலைவர் என்று வரலாற்றில் இடம் பெறுவதுதான் தனது நோக்கம் என்று கூறியுள்ளார். அத்துடன் ஒருபோதும் தான் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதுமில்லை இனிமேலும் பயன்படுத்தப் போவதுமில்லை என்றும் ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்களை தவறாக பிரயோகிப்பதற்குப் பதிலாக நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்தும் ஏற்பாடுகளைத் தான் செய்யப்போவதாகவும் கூறியுள்ளார்.

இக்கூற்றுக்களை வெளியிடவேண்டிய நெருக்குதல்கள் சிறிலங்காவில் உருவாகிவிட்டது. பொதுசன ஐக்கியமுன்னணியில் உள்ள அங்கத்துவக் கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையைத் தேர்தல் பிரசாரங்களின்போது உறுதியளிக்கப்பட்டது போல் மாற்றியமைக்கவேண்டுமென்றும் அதற்குக் காலம் பற்றாவிட்டால் ஒரு காலக்கெடுவைக் கொடுத்து அதைச் செய்யும்படியும் இறுக்கமான நிலைப்பாட்டுடன் நெருக்குதல்களை சந்திரிகாவுக்கு ஏற்படுத்தின

ஜே. வி. பியினரும் யூலை 15க்கு முன் மேற்படி மாற்றம் ஏற்படுத்தப்படாவிட்டால் எதிர்நடவடிக்கை எடுப்போம் என்றும் கூறியுள்ளனர். சிங்கள இளைஞர்கள் மத்தியில் உள்ள இவ்வெதிர்பார்ப்பை பின்போடுவதற்கு அல்லது அவர்களது சீற்றத்தை திசைதிருப்ப அரசு முயற்சி எடுக்காமலும் இருக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான தனது யுத்தத்தைப் பாவித்து சிங்கள இளைஞர்களின் இனவாத உணர்வைத் தட்டி எழுப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டது ஆனால் போரில் அரசுக்குத் தொடர்ந்து ஏற்படும் தோல்விகள் சிங்கள மக்களை மேலும் விரக்தியடையத்தான் செய்துவருகிறது.

இதைவிட சிங்கள இளைஞர்களின் சக்தியைப் பிளவுபடுத்தும் வேறொரு முயற்சியும் நடந்துள்ளது. ஜே. வி. பியில் இருந்துவிலகிய ஒரு குழுவை வைத்து புதிய அரசியல்கட்சி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்சியினர் நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறையைத் தாம் எதிர்க்கின்றபோதிலும் வடக்குக் கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதுவரை நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்வதை தாங்கள் ஆதரிப்பதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதிலிருந்து இக்கட்சி அரசின் சூழ்ச்சியால் உருவாக்கப்பட்டது என்பது தெளிவாக விளங்குகிறது. இக்கட்சி தன்னை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யும் பொருட்டு தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளது.

சிங்கள மக்களைத் திசைதிருப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை ஒன்றும் பலிக்காமல் போனதால்தான் சந்திரிகா காலியில் வைத்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றப்போவதாகக் கூறவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அவ்விதம் அவர் கூறினாலும் அதை எப்போது செய்யப்போகிறார்? அவரிடம் அதைச் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தவர்கள் இருக்கிறார்களா? இது நடக்கப் போகும் விடயமல்ல சிங்கள மக்களை ஏமாற்றுவதற்காகக் கூறப்படும் பொய். சட்டத்தரணிகளுக்கு வழக்குகள் தவணை போனால் எவ்வித இலாபம் ஏற்படுமோ அவ்விதம் இந்த விடயத்தில் காலதாமதம் ஏற்படுவது சந்திரிகாவுக்கு இலாபம்தான். ஆனால் சிங்கள மக்கள் அந்தளவுக்கு ஏமாளிகள் இல்லை.

## அமெரிக்கா - இந்தியா - பாகிஸ்தான்

# வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்கள்

### உலக வலம்

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பை நிறுத்தவேண்டும் என்று அமெரிக்கா கூறுகிறது. அப்படி நிறுத்தினால் தான் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் F 16 ரக போர் விமானங்கள் உட்பட ஆயுதங்கள் தரமுடியும் என்றும் அமெரிக்கா கூறிக் கொண்டு வருகிறது.

நாம் அணுகுண்டுத் தயாரிப்பில் இறங்கவில்லை. இப்போதுள்ள அணு உலைகள் நாட்டின் அபிவிருத்திக்கும் சமாதானத்துக்குமே பாவிக்கிறோம் என்று பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறது.

அமெரிக்காவும், பாகிஸ்தானும் இந்த தர்பாரை நடத்திக்கொண்டிருந்த வேளையில்-

பலம் வாய்ந்த சோவியத் யூனியன் உடைகிறது. சோவியத் யூனியனோடு ஒட்டியிருந்த சிறுசிறு நாடுகள் சுதந்திரம் பெறுகின்றன. ரஷ்யாவுக்கு உலகில் இருந்த பலமும் குறைவடைகிறது. இந்த உடைவினால் இந்தியா ரஷ்யாவோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமும் கேள்விக் குறியாகிவிடுகிறது. பாதுகாப்பு விடயத்தில் இந்தியா இரண்டும் கெட்டான் நிலைக்கு தள்ளப்படுகிறது.

இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையை மீள் பரிசீலனைசெய்யவேண்டிய நிலையில்- அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள முறுகல்நிலை- இதனால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் புதிய உறவு முளைவிடுகிறது.

இதனால் இதுவரை இந்து சமுத்திரப் பிராந்தியத்தை சமாதானப் பிராந்தியமாக ஆக்கவேண்டுமென்று கூறிக் கொண்டுவந்த இந்தியாவும் அந்தக் கோரிக்கையை ஒரு புறத்தில் வைத்துவிட்டு அமெரிக்காவோ பல பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. அமெரிக்காவின் 5வது கடற்படை அணி இந்து சமுத்திரப்பிராந்தியத்துக்குள் நுழைய இருக்கின்றது. பயிற்சிகளும் நடைபெற இருக்கின்றன.

பாகிஸ்தான் கடந்தகாலத்

(9ம் பக்கம் பார்க்க)



**மிசிஸ் டாமோடரன்**

மிஸிஸ் டா: வட்டு யூதிங் ஒவ்ப் திஸ் மண்டடீவு பைற்டாலிங்.

மிஸ்டர் டா: எனக்கு கெட்றவுண் டடிக்குது டாலிங்.

மிஸிஸ் டா: சந்திரிக்காவாக்குச் சீட்டு அள்ளினது. போராளிகள் ஆயுதம் அல்லினது.

மிஸ்டர் டா: வெல் செட் டாலிங்.

— சிரித்திரன் சுந்தர்

# ஒருபோதும் சாத்தியப்படமுடியாத சமாதானம்:

# நனவுலக யதார்த்தமும் கனவுலக யதார்த்தமும்

நீண்ட காலமாய் தமிழரின் தலைமை கொழும்பில் இருந்தது. ஆனல் தற்போது கொழும்பு பேச்சுவார்த்தைக்கு யாழ்ப்பாணம்வரவேண்டி நேர்ந்தது. கீழது மேலாய் மாறிய நிலைமை. உண்மையில் தமிழ்மக்களின் அரசியலிலும், இலங்கையின் அரசியலிலும் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளதை இது குறித்து நிற்கின்றது.

உண்மையில் இது முழு அரசியலையும் திருப்பியுள்ள ஒரு பாரிய மாற்றம், இதனை இதற்கே உரிய யதார்த்தத்துடன் சிந்திக்க சிங்கள உயர் குழாம் இன்னும் தயாராய் இல்லை.

இதேபோல இன்னொரு யதார்த்தத்தையும் சுட்டிக் காட்டிக்கொண்டு பிரச்சினையை ஆராய்வோம்.

தத்தித்திரியும் தவளையைப் பார்த்து ஆமை கேட்டது "தவளையாரே, நீர் நல்லாய்ப் படித்திருந்தும் உமக்கு நடக்கத்தெரியாது போனதேனே?' அப்போது ஆமையைப் பார்த்து தவளை கேட்டது. அதிகம் படித்த ஆமையாரே, உம்மை மல்லாத்திவிட்டால் உமக்கு நகரத் தெரியாததேனே?

மல்லாந்து கிடந்த ஆமை, காலொடிந்த தூணேறிய சிங்கத்தைப் பார்த்துத் தனக்கு நேசக்கரம் நீட்டுமாறு கேட்டது. அப்போது ஆமையைப் பார்த்து தவளை மீண்டும் சொன்னது:

"நடை பயில அந்தச் சிங்கத்திடம் உதவி கேட்டு நான் பட்ட பாட்டை நீ அறியாயோ? அந்த நேசக்கரம் கூரிய நகங்களால்ஆனது. அந்தக்கரம் உன்னிற்பட்டால் நீ ஓடுவேறு தலைவேருய்ப் போய்விடுவாய்"

(தவளை ஐ. தே. க. ஆமை சந்திரிகா—சு. க.)

மாறி மாறி ஆட்சிக்கு வந்த தவளையினதும், ஆமையினதும் யதார்த்தம் மேற்படி உள்ளது. இத்தனைக்குப் பின்பும் தவளையும் ஆமையும் தம் நிலையை உணர்வதாயில்லை. கூரிய நகத்தாலான நேசக்கரம் காலொடிந்த பின்பும் தூணில் நின்று கடலை எட்டிப் பார்க்கிறது.

தவளைக்கும் ஆமைக்கும் தூணேறிய சிங்கத்திற்கும் இன்னும் யதார்த்தம் புரிவதாயில்லை. மூவரும் இன்னும் கனவுலகில் வாழ்கின்றனர். நல்லாய்ப்படித்தென்ன? அதிகம் படித்தென்ன? கூரிய நகமிருந்தென்ன? இன்னும் யதார்த்தம் புரியவில்லை.

நனவுலக யதார்த்தம் ஒன்ருய் இருக்கையில் சிங்களத் தலைவர்களினதும், புத்திஜீவிகளினதும் கனவுலக யதார்த்தம் வேறொன்ருய் உள்ளது.

அண்மையில் லண்டன் ஒப்சேவர் பத்திரிகைக்கு சந்திரிகா அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்;

"நாட்டிலுள்ள இரண்டு சிறுபான்மை இனத்தவரும் சில குறைகளை அனுபவிக்கின்றனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறேம். எனினும் உண்மையில் பாரபட்சம் எதுவும் காண்பிக்கப்படவில்லை"

பாரபட்சம் காட்டப்படாமல் எப்படிக் குறைநேர்ந்தது? உண்மையிற் சந்திரிகா தம்மால் தமிழருக்கு எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லை என்பதைத்தான் நிலைநிறுத்த விரும்புகிருர். இப்படிப்பட்ட சிந்தனை ஓட்டத்தைக் கொண்ட ஒருவரால் எப்படிச் சமாதானத்தைக் கொண்டுவந்திருக்க முடியும்? எப்படி இனிமேல் கொண்டுவர முடியும்?

**மு. திருநாவுக்கரசு**

நிலத்திற் கால்படாமல் வளர்ந்த சந்திரிகாவிற்கு, பிரான்சிற் படித்த சந்திரிகாவிற்கு இலங்கை மண்ணின் யதார்த்தம் ஒருவேளை புரியாமல் இருக்கிறதோ?

இனரீதியான பாரபட்சத்திலிருந்தே இனப்பிரச்சினை தோன்றியது. ஆரம்பத்தில் தமிழர் ஐக்கிய இலங்கையில் சிங்களவருடன் அன்னியோன்னியமாக வாழவே பெரிதும் ஆசைப்பட்டனர், அழகிய இலங்கைத்தீவை சுதந்திரமும் சுபீட்சமும் நிறைந்த ஒரு தேசமாகக் கட்டியெழுப்ப தமிழர் பெரிதும் முயன்றனர்.

நவீன வாலாற்றில் இலங்கைக்கு சுதந்திரம் வேண்டும் என்ற கருத்தை முதல்முறையாக சேர், பொன். அருணசலம் எழுப்பி அதன் பெயரால் 1919ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் எனும் அமைப்பை ஸ்தாபித்தார்.

'வெள்ளையனே வெளியேறு' என்று காந்திய இயக்கத்தாற் கவரப்பட்ட யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் இலங்கைக்கு சுயராஜ்ஜம் வேண்டும் என்ற கொள்கையை 1930களில் பெரிதும்முன்வைத்தது. முக்கிய சிங்களத் தலைவர்கள் சுதந்திரத்தில் அக்கறை அற்றிருந்த காலத்தில் தமிழர் சுதந்திரத்தின் மீதும், ஐக்கியத்தின் மீதும், சுபீட்சத்தின் மீதும்அதிக அக்கறைஎடுத்துச் செயற்பட்டனர்.

சிங்களத் தலைவர்களின் தொடர்ச்சியான பாரபட்சங்கள் தமிழரின் மேற்படி விருப்பத்திலும் மனப்பாங்கிலும் ஆப்புக்களை ஏற்றின. பாரபட்சத்தின் தொடர்விளைவுகள் தமிழரைப் பிரிந்து செல்லும் போராட்டத்திற்கு தள்ளின. பாரபட்சங்களுக்கும், அநீதிகளுக்கும் மத்தியில் கொழும்புத் தமிழ்தலைமை நசிந்து கசிந்து சிங்களத் தலைவர்களுடன் சமரசம்காண அவர்களுக்குப் பின்னுற் திரிந்தது. ஆயினும் என்ன? அவர்களைப் புறங்காலால் சிங்களத் தலைமை உதைத்தது.

இதன்பின், கொழும்புத் தலைமை நெக்குருகிப்போக தமிழ் மண்ணிற் தலைமை தோன்றவேண்டிய வரலாறறு யதார்த்தம் உதயமாகியது. இதன் பெருமாற்றம்தான் கொழும்பு, யாழ்ப்பாணம் வரநேர்ந்தமையாகும்.

இந்த மாற்றத்தைச் சற்றும் கருத்தில் எடுக்காமல் சந்திரிகா மேற்படி லண்டன் ஒப்சேவருக்கு அளித்த அந்த பேட்டியிற் கூறினார்.

"பெரும்பான்மைச் சிங்கள மக்களில் நன்கு படித்தவர்களும், நாட்டின் நலன்களில் போதியளவு பங்குக்கு உரிமை கோர தமக்கு உரிமையுண்டு எனக்குரல்எழுப்புகின்றனர்."

இப்படிச் சிங்களப் புத்திஜீவிகள் குரல் எழுப்புவதா

(9ம் பக்கம் பார்க்க)

# ஈழக்கடற்பரப்பில் ஆழக் காலூன்றிய

# சோழர் வழியில் வேங்கைக் கடல் வீரர்

தமிழீழம் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய நாடு. வடக்கு எல்லையாக இந்தியாவும் தெற்கு எல்லையாக சிறிலங்காவும் உள்ளன. வடகீழ் - மேற்காகப் பரந்த கடல் (இந்து சமுத்திரம்) குமுறிக்கொண்டிருக்கிறது. அதன் ஆர்ப்பரிக்கும் அலைகள், ஈழத்தாயின் கால்களைத் தழுவும்போது அவற்றின் சீற்றமும் சினமும் குமுறலும் அடங்கிவிடுகின்றது.

வடக்கே முப்பது மைல் தூரத்தில் இந்தியாவின் தென்கரை தெரியும். வடகிழக்காக மலேசியா - சிங்கப்பூர் - இந்தோனேஷிய - தாய்வான் - பர்மா போன்ற நாடுகள் பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் விரிந்து, பரந்து கிடக்கின்றன. புத்தளத்துக்கு மேற்கே வெகு தொலைவில், சில - ஆயிரம் மைல்களுக்கப்பால் ஆபிரிக்கக் கண்டம் உள்ளது. தமிழீழத்திற்கும் - தென்னிந்தியாவுக்கும் இடைப்பட்ட பகுதி பாக்கு நீரிணை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

இந்துசமுத்திரப் பிராந்தியமானது கப்பல் போக்குவரத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக விளங்குகிறது. உலக நாடுகளின் பாரிய கப்பல்கள் இந்தச் சமுத்திராதேவியை ஒவ்வொரு வினடியும் கடந்து கொண்டிருக்கின்றன. இன்று பல நாட்டுக் கப்பல்கள் தமிழீழக் கடற்பரப்பிலும் நீச்சலடிக்கின்றன.குறிப்பாக சிறிலங்காவின் போர்க் கப்பல்கள் அங்குமிங்கும் அலைந்து திரியும் அட்டகாசங்கள் கொஞ்ச நஞ்சமல்ல; ஆனல், ஒரு காலத்தில் இக்கடற் பிராந்தியம் முழுவதும் சோழர்களின் கப்பல்கள் உலாவப்போனதாக வரலாறு கூறுகிறது.

தென்னிந்தியாவின் 'புகார்' என்ற துறைமுகத்திலிருந்து அன்று ஈழம் வரை மட்டுமல்ல; கடாரம் வரையும்- அதற்கு அப்பாலும்கூட சோழ அரசர்களின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்திருக்கிறது. பூம்புகார் தென்னிந்தியாவின் அழகிய துறைமுக நகரமாக அன்று விளங்கியது. இதை காவிரிப்பூம் பட்டினம் என்றும் அழைக்கிறார்கள். இப்புகார் துறைமுகப் பகுதியை மணிமேகலை என்ற கடல் தெய்வத்தின் புராதன இருப்பிடம் என்று




இலக்கியங்கள் வர்ணிக்கின்றன.

கி. பி. 9-ம் நூற்றுண்டில் 'சுலைமான்' என்னும் அராபிய வணிகனெருவன் சீனவுக்கும் பாரசீகக் கடலுக்குமிடையில் அடிக்கடி பயணம்செய்து பெரிய அளவில் வியாபாரம் புரிந்து வந்தான். (ஆதாரம்- 'சோழர்கள்'- நீலகண்டசாஸ்திரி- பக்கம் 625)

இந்தப் புகழ்பூத்த வணிகரின் பிரயாணயக் குறிப்பு ஒன்றிலே மாலைதீவு மக்கள் வீடுகள் கட்டுவதிலும், கப்பல்கள் கட்டுவதிலும், நல்ல திறமையானவர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தச் சுலைமான் சோழமண்டலக் கரைக்கு வந்திருக்க வாய்ப்பேதும் இல்லை. மேலும் அவரின் பிரயாணக்காலம் விஜயாலய வம்சத்தின் எழுச்சிக்கு முன்பாகும். ஆனல் இப்படிப் புகழப்பட்ட மாலைதீவுக் கப்பல்களையே இராஜேந்திரச் சோழனின் கப்பல்கள் தோற்கடிக்கடித்ததாக வரலாறு கூறுகிறது. இதை வைத்துப் பார்க்கும்போதுசோழர்களின் கப்பல்களின் பெருமையை எம்மால் உணரமுடிகிறது.

புகார்த் துறைமுகத்திலே அன்று மூன்றுவகைக் கப்பல்கள் -அல்லது கலங்கள் தரித்து நின்றதாக 'பெரிபுளூஸ்' என்னும நூல் வர்ணிக்கிறது ஆனல இதற்கான நேரடிச் சான்றுகள் ஏதுமில்லை.

[நெடுந்தூரம் குறிபார்த்து அம்பு எய்யக்கூடிய சிறந்த வில் வீரர்கள், கப்பலின் முன்பக்கத் தளத்திற்கு வந்து வரிசையாகத் தயாராக நிற்பார்கள்]

பல மரத்துண்டுகளை ஒன்றேடொன்று சேர்த்துக் கட்டும்முறை சிராய்' கப்பல்களின் சிறப்பான அமைப்பாகும். சிராய் என்னும் இடத்தில் தயாரிக்கப்பட்ட கப்பல்கள் மத்தியதரைக் கடலில் செல்லும் கப்பல்களிலிருந்து அமைப்பில் வேறுபட்டிருப்பதாக 10ம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் 'அபுசைத் ஆசான்' என்பவர் எழுதியிருப்பதாக வரலாற்ருசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.

**மு. வே. யோ, வாஞ்சிநாதன்**

சிரியா-ரோம் தேசத்ததவர்களோ மரத்துண்டுகளைத் தைப்பதற்குப் பதிலாக ஆணி அடித்து ஒன்று சேர்க்கின்றனர். இன்றும் சென்னைக் கடற்கரையில் இதுமாதிரித் தேங்காய் நாரினல் கட்டப்பட்ட கட்டுமரங்களைக் காணலாம். தமிழீழத்திலே குறிப்பாக வடமராட்சியில் இதைப் போன்ற சிறிய அளவிலான கட்டுமரங்கள் பயன்படுத்தப் படுவதை நாம் எடுத்துநோக்க மறந்துவிடக்கூடாது. (ஆதாரம்: 'பெராண்ட் வொயேஜ்' பக்கம் 93, ரெனெடெனட் எழுதிய 'ஏசியன் எக்கவுண்ட்ஸ்')

இவ்வகைக் கப்பல்கள் அக்காலத்தில் 'புகார்' துறைமுகத்திலிருந்து உள்ளூர் சிறிய துறைமுகங்களுக்கு பொருட்களை ஏற்றியிறக்கப் பயன்பட்டன, இன்னுமொருவகைக் கப்பல்கள் பெரிய அளவான சரக்குக்கப்பல்களாகும். அவை பெரிய மரங்களிலிருந்து செதுக்கப்பட்ட பலகைகளினல் கட்டப்பட்டவை. இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளிடையே - அதற்கு அப்பாலும் இவ்வகையான கப்பல்கள் புகார் துறைமுகத்திலிருந்து சரக்குகளை ஏற்றி இறக்குவதற்காகப் பயன்பட்டன.

வலிப்பதற்கு இருபக்கமும் முப்பதுக்கு மேற்பட்ட வலி பலகைகளுடன் ஆட்களிருந்து களைப்புத் தெரியாமல் பாட்டுக்கள் பாடியாடி வலிப்பார்கள். இக்கப்பல்களில் பாய் மரமும் உண்டு. செல்லும் திசைகளுக்கு ஏற்ப பாய் மரத்தை ஏற்றி-இறக்கி-மாற்றிவிட்டுப் பயணம் செய்யக் கூடியவை.

இக்கப்பல்களில் ஆற்றல் மிக்க குதிரைகள் வந்தன. கருமிளகு மூட்டை மூட்டையாக ஏற்றப்பட்டது. வடக்கு மலையில் விளையும் இரத்தினக்கற்களும், தங்கமும் மேற்கு மலையிலிருந்த சந்தனமும், அகிலும், தென்கடலில் கிடைக்கும் முத்தும், மேலைக் கடற்செல்வமான பவளமும், கங்கைப் பள்ளத்தாக்கின் விளைபொருட்களும், காவிரி தரும் வளமான பொருட்களும், ஈழத்து உணவும், காழகத்திலிருந்து (பர்மா) வரும் சரக்குகளுமாக கப்பல்கள் நிறைந்து செழிப்பில் குளித்துக்கொண்டு கிடந்ததாக 'பட்டினப்பாலை' (வரிகள் 184-193) கூறுகிறது.

இதைவிடப் பெரிய கப்பல்களும் சோழர்களிடம் இருந்திருக்கின்றன. இவைபோர்க்கப்

(9ம் பக்கம் பார்க்க)

நல்லூர் நூலகம்.

சிறு கதை

# மனம் திருந்துவார்களா?

கருணைச்சுதன்

செந்தூரன் மூன்றாவது தடவையாகத் தலைவாரிக் கொண்டான்; இரண்டாவது தடவையாக மணப்பொடி பூசிக்கொண்டான். என்றாலும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. முகத்தில் அங்குமிங்குமாக அலங்கோலம் போட்டிருந்த பருக்கள் அவனை முறைப்பது எப்படிப் பிடிக்கும்?

மணியோ ஐந்து நெருங்கிக் கொண்டிருந்தது. இனியும் மினைக்கெட முடியாது. டியூஷன் சரியாக ஐந்துமணிக்கு விட்டுவிடும். அவனது நண்பர்களானசங்கர், ரவி, சுகுமார்- மூவரும் நெல்லியடி பேரூந்து நிலையத்தில் - மன்னிக்கவும், இப்போ சிற்றூர்தி நிலையம்- அவனுக்காகக் காத்திருப்பார்கள்.

செந்தூரனின் நண்பர்களில் சங்கர் முக்கியமானவன். சிறு வயது முதல் அவனுடன் ஒன்றாகப் படித்தவன் அத்துடன் இருவரும் ஏ. எல். என்ற மாமல்லனால் மூன்று சுற்றிலும் முகம் குப்புற வீழ்த்தப்பட்டு, மூக்குடைபட்டு 'நொக்கவுட்' ஆனவர்கள். ஆமாம்! இவர்களைப்பொறுத்தவரை, ஓ.எல். ஒரு மல்லன்: ஏ. எல். ஒரு மாமல்லன்.

இருவரும் பெற்றோருக்கு கொள்ளிப் பிள்ளைகள் இருவரின் பெற்றோரும் இவர்களின் எதிர்காலம்பற்றி அக்கறையே இல்லாதவர்கள். எப்படியாயினும் பிள்ளைகள் சந்தோஷமாக 'வீட்டோடை' இருந்தால் போதும் என்ற உயர்நோக்கம் கொண்டவர்கள்.

அடுத்த இரு நண்பர்களான ரவியும் சுகுமாரும்வெளிநாடு போகிறோம் பேர்வழிகள்என்று கொழும்பில் ஒன்றரை வருடங்களாகத் தங்கியிருந்து, தத்தமது வெளிநாட்டுச்சகோதரர்களின் வருவாயில் சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள். தற்சமயம் அரச கெடுபிடிகளால் கொழும்பில் இருக்கப் பயந்து பிறந்த மண்ணுக்கு வந்துசேர்ந்தவர்கள். வெளிநாட்டுப் பணமிருக்கும் போது என்ன குறை, என்ன பயம் இங்கே? என்றாலும் அந்தக் கொழும்புச் சொகுசும் சுகபோகமும்இங்கே இல்லையே என்ற மனத்தாங்கல் அவர்களுக்கு இருக்கத்தான் செய்தது. அதை ஒரு அளவிலாவது ஈடுகட்டுவதுதான் இந்தச் சைக்கிள் உலா.

இன்று அவர்கள் நால்வரும் மாலிசந்திப் பக்கமாக உலாப் போதற்குத் திட்டமிட்டிருந்தார்கள். அதுதான் நல்ல தோட்டவெளி. ஆள் நடமாட்டமும் குறைவு. டியூஷன் பிள்ளைகளுடன் பகிடி விட்டால் கேட்க ஆளிருக்காது. அப்படி இருந்தும், ஒருநாள், இந்தச் சங்கர் எக்கச் சக்கமாக ஒரு 'பச்சைப்' பகிடியைசொல்லப்போக ஆத்திரமடைந்த துணிச்சல்கார மாணவி ஒருத்தி - அவள் பெயர் என்னவோ சிந்துவோ குந்துவோ - தன் கால் செருப்பைக் கழற்றி அவனை அடிக்க வந்துவிட்டாளே.

நல்ல காலம். மக்கள் நடமாட்டம் இல்லாததால் நிலைமையை ஒருவாறு சமாளித்துக்கொண்டுவிட்டார்கள். அதற்குப் பின்னரும் அவர்கள் உலா தொடர்ந்துகொண்டேதானிருந்தது. ஆனால் ஒரு சின்னத் திருத்தம். இப்போதெல்லாம் அவர்கள் பகிடியில் 'பச்சை' கலப்பதில்லை. நல்ல பிள்ளைகள்!

செந்தூரன் நண்பர்களிடம் வந்துசேரவும்டியூஷன்முடிந்து மாணவ, மாணவியர் புற்றீசலாக வீதியில் சிறகடிக்கவும் நேரம் சரியாக இருந்தது.

''செந்து! நீ சரியாக முகூர்த்த நேரத்துக்குத்தான் வந்திருக்கிறாய். நாங்கள்தான் நாலரையிலிருந்து வாய்பார்த்துக்கொண்டு இருக்கிறோம்'' சுகுமாரின் அங்கலாய்ப்பும் ஆதங்கமும் இது.

எங்கடை ஆக்கள் வருகினம்!'' காலமறிந்து கட்டியம் கூறினான் ரவி.

''டேய்! பிள்ளையள் போனதுக்கும் பிறகு போவம்!''— இது சங்கர்.

அந்த மூன்று மாணவிகளின் சைக்கிள்கள் இவர்களைக் கடந்து, சந்தியை அடைந்து மாலிசந்திப் பக்கம் திரும்பின. சைக்கிள் இளவரசர்கள் அவர்களைப்பின்தொடர்ந்தனர். சைக்கிள்கள் குடிமனைகளைக் கடந்து தோட்டவெளியை அடைந்ததும் சங்கர் ரவியைப் பார்த்துக் கேட்டான்.

''ஏன்டா ரவி, சைக்கிள் ஓடையிக்கை நீண்ட பின்னல் இப்படி அங்குமிங்குமாக அசையுமோ?'' - முன்னால் சென்றுகொண்டிருந்த மாணவியருள் ஒருத்தியின் கருநாகப் பின்னல் அசைவதைப் பார்த்தே அவன் அப்படிக் கேட்டான்.

''அதுதான் மச்சான் எனக்கும் தெரியவில்லை. ஒண்டு செய்யடா. பின்னல் ஒண்டை வளர்த்துசைக்கிள் ஓடிப்பார். தெரியும் ''

ரவியின் பதிலைக் கேட்டு மற்ற நண்பர்கள். பெரிதாகச் சிரிக்க, மாணவிகள் நீண்ட பின்னல்காரியைப் பார்த்துவிட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்.

ரோட்டுக்கு அருகேயிருந்த மதுபானச்சாலையிலிருந்து ஏகப்பட்ட சத்தங்கள். பாட்டுந்தாளமுமாக அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது. சிறிது நேர மௌனத்துக்குப்பின் சங்கர் வாயைத் திறந்தான்.

''எடே குமார்! இந்த லேடீஸ் சைக்கிளின்ரை கான்டிலும் பெடலும் குடுத்து வெச்சதுகள்.''

''அப்படியே?''

''ஓமடா. அடுத்த பிறவி எடுக்கிறதெண்டால் இதுகளிலை ஒண்டாத்தான் பிறக்க வேணும் கண்டியே!''

''அடுத்த பிறவி எண்டு ஒண்டு இருந்தால், நீ கட்டாயம் பெடலாகத்தான் பிறப்பாய்.''

''ஏன்டா பெடல்?''

''அதுதான் செருப்புக்குக் கீழே இருக்கும்.''

''அடுத்த பிறவியிலும் செருப்புத்தானா?''

பழைய சம்பவத்தை ஞாபகமூட்டியதால் சங்கரின் ஆதங்கம் இது.

''ஓமடா செருப்பாகப் பிறக்கிறதுக்குத்தான் உனக்கு நிறையப் பிராப்தம் இருக்கு எண்டு நாங்கள் நினைக்கிறம்''- இது ரவி.

இதைக்கேட்டு மற்ற நண்பர்கள் கொல் என்று சிரிக்க மாணவிகள் கைக்குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டார்கள். தத்தமது கைப்பிடியை விட்டுவிட்டு அடுத்தவனுடைய கைப்பிடியைப் பிடித்தபடி நால்வரும் வீதியை அடைத்துக் கொண்டு சென்றார்கள். எதிரே வந்த வயோதிபர் ஒருவர் ரவியுடன் மோத இருந்ததால், சைக்கிளை லாவகமாக வெட்டி எடுத்த ரவி, அப்புவுக்கும் இந்த வயதிலையும் பிராக்குப் பார்க்கிற பழக்கம் போகவில்லைப் போலும்'' என்று நக்கலாகக் கூறினான். சற்று மதுபோதையில் சென்ற அவ்வயோதிபர் திரும்பிக் கெட்டவார்த்தைஒன்றை இவர்கள்மீது எய்துவிட்டுத்தான் சென்றார். ஆனால், அது இவர்களைக் காயப்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவர்கள் கோயிலடியைக் கடந்ததும் சங்கர் செந்தூரனைப் பார்த்துக் கேட்டான். ''டேய் செந்து! நானும் பாக்கிறன் நீ இவ்வளவு நேரமும் வாயே திறக்கவில்லை ஏன்?''

''நான் உங்களைப் போல டியூஷன் பிள்ளைகளோடு பகிடி விடுகிறது இல்லை.''

''பின்னை யாரோடை விடுகிறனி?''

''கோயிலுக்குப் போற பிள்ளையளோடைதான்!''

''கோயிலுக்குப்போற பிள்ளையளோடையோ?'' டேய் பாவமூட்டை சுமக்கப்போறியடா!''

''பரவாயில்லையடா! அது தான் பாதுகாப்பு.''

''அதுதான் ... கோயிலுக்குப் போற பிள்ளையளின்ரை காலிலை செருப்பு இருக்காதெல்லே!'' இதைக் கேட்டதும் நண்பர்கள் வெடித்துச் சிரிக்க மாணவியரும் வாயைப் பொத்தி உடல்குலுங்க ஒலி எழும்பாமல் சிரித்தார்கள். சைக்கிள்கள் கலை பண்பாட்டுக் கழகத்தடியை அண்மித்த போது அவர்கள் அமைதியாகப் பண்பாட்டினராக அதைக் கடந்து சென்றனர். அவர்களின் எல்லைப் பிரதேசமான



மாலிசந்தியும் வந்துவிட்டது. சந்தியில் மூன்று மாணவியரும் மூன்று திசைகளில் சென்று விடுவார்கள். மேற்கொண்டு அவர்களுகு மெய்ப்பாதுகாவலர்களாக இயங்க அவர்கள் விரும்புவதில்லை. ஏனெனில், அது அவர்களின் பாதுகாப்புக்குக் குந்தகமான விஷயம் என்பதுதான்.

மாலிசந்தியில், வீரச் சாவடைந்த பெண்போராளியின் அந்த மாபெரும் 'கட் அவுட்'டுக்கும் கூட்டுறவுக் கடைக்கும் இடையில் போராளிகளின் 'டிரக் வண்டி ஒன்று வாயைப் பிழந்தவாறு 'மெக்கானிக' ஒருத்தரை இடுப்புகுமேல் விழுங்கிக் கொண்டிருந்தது. வண்டி நிறையப் போராளிகள் ஆயுதங்களுடன் காணப்பட்டனர்.

சந்தியில் நால்வரும் சைக்கிள்களை வெட்டித்திருப்பிய போது தற்செயலாக அவ்வாகனத்தின் முன்இருக்கையை நோட்டம்விட்ட செந்தூரன் சிறு அதிர்வுடன் சைக்கிளை நிறுத்தி சங்கர்பக்கம் திரும்பி, ''டேய் சங்கர்! முன்சீட்டிலை இருக்கிறது எங்கடை முரளி மாதிரி இல்லை?'' என்று கேட்டான். 'முரளி' என்ற சொல் முன் இருக்கையில் இருந்த அந்தப் போராளியின் காதில் விழுந்திருக்கவேண்டும். இவர்கள் பக்கம் திரும்பிய அவன் முகத்தில் ஒரு சின்னப் புன்னகை மலர்ந்தது. கதவைத் திறந்து பொத்தென்று தரையில் குதித்த அவன் இவர்களை நோக்கி வந்தான். நண்பர்கள் நால்வரும் அனிச்சையாக அவனுக்கு மரியாதை செய்வது போல் சைக்கிள்களை விட்டிறங்கி பாதை ஓரமாக நின்றார்கள்.

எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கும் கூர்மையான விழிகள்; எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதுபோன்ற உடல்வாகு; முரளியின் அந்தத் தோற்றம் அவர்களின் மனதில் ஒரு மரியாதை உணர்வை ஏற்படுத்தியது.

''என்ன செந்து சங்கர் படிப்பெல்லாம் எப்படிப் போகுது?'' என்று அவர்களின் கரங்களைப் பற்றி தோழமையுடன் கேட்டான் முரளி

''ம்... என்ன படிப்பு? 'தேட்சை'யும் சரிவரவில்லையப்பா!

சிறு அதிர்விலிருந்து மீண்ட செந்துவும், சங்கரும் விசனத்துடன் பதிலளித்தார்கள். ரவியையும் சுகுமாரையும் பார்த்து 'இவர்கள் யார்' என்ற பாவத்தில் முரளி கண்களாலேயே சங்கரைக் கேட்க,

''இவர்களும் எங்களைப் போலத்தான். ரவி-சுகுமார்'' என்று சிக்கனமாக அறிமுகம் செய்துவைத்தான் சங்கர்.

"அதுசரி முரளி, ஓ எல்லிலை ஐஞ்சு 'டி' எடுத்தனியல்லே! ஏ எல்லிலையும் முதலாந்தவணை எங்களோடை படிச்சனி. மாஸ்டமாரெல்லாம் உன்னிலை நல்ல நம்பிக்கையோடை இருந்தினம். ஏன் இப்படித் திடீரெண்டு...' என்று இழுத்தான் செந்து. சற்று மௌனத்திற்குப் பின் முரளி கூறினான்.

''உங்களுக்குத் தெரியுந்தானே, பொம்பர் குண்டு வீச்சிலை. அப்பா, அம்மா என்னுடைய இரண்டு தங்கச்சியளும் செத்துப்போனது? கடையும் வீடும் தரைமட்டம் என்ன செய்யிறது என்று தெரியாமல் திகைத்துப்போய் நின்ற என்னை சித்தப்பாதான் தன்ரை வீட்டுக்கு கூட்டிப் போனார். அவரும் வசதியில்லாதவர்தான். ஆனாலும் என் படிப்புக்கு வழிசெய்ய முயற்சித்தார். நல்ல மனிதர். அதுதான் உங்களோடை ஏ. எல். முதலாந் தவணை வரை படித்தனான்.

நால்வரும் கண்வெட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். செந்தூரன் ஏதோ கேட்பதற்காக எத்தனித்தவன் பின்னர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். இதைச் சூசகமாகப் புரிந்து கொண்டு அவன் உள்ளத்திற்குள் புகுந்து 'றெக்கி' எடுத்துக்கொண்ட முரளி சிறிதாகப் புன்னகைத்தான்.

''செந்து நீர் என்ன கேட்க வந்தனீர் எண்டுஎனக்கு விளங்குது'' என்று கூறிய முரளி கண்மூடிச் சிறிது நேரம் மௌனமானான். பின்னர் தொடர்ந்தான்.

''செந்து எமது வருங்கால இளஞ்சந்ததியினரின் நன்மைக்காகப் பயன்படுத்துவது தான் சிறப்பானது என்று எனக்குத்தோன்றியது. அதற்காகவே நான் இப்பாதையைத் தேர்ந்தெடுத்தன். இப்ப எனக்கு நான் வாழுகிற வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்குது; மனநிறைவையும் தருகுது. தனக்கென்று வாழாமல் தன் மக்களுக்காக தன் மண்ணுக்காகவாழ்வதில் ஒரு தனிச் சுகமுண்டுசெந்து அதுவாழ்ந்து பார்த்தால்தான் தெரியும்— முரளி கூறிமுடித்தான். அவன் கூறியவை அந்த நால்வரின் இதயத்திலும் கூரியஆணியாக அறையப்பட்டு உள்ளிறங்கியது. நால்வரும் முரளியின் கண்களைச் சந்திக்க நாணித் தரையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்?

'டிரக்' வண்டி உறுமியது. முரளி திரும்பிப்பார்த்தான். விழுங்கிக்கொண்டிருந்த மெக்கானிக்கை வெளியே கக்கிவிட்டு வாயை மூடிக்கொண்டது அவ்வண்டி. வண்டியின் சாரதி முரளியை எட்டிப் பார்த்தான்.

''நாங்கள் இப்ப முக்கிய விஷயமாக ஒரு இடத்துக்குப் போறம். நான் திரும்பி வந்தால் உங்களை வந்து சந்திக்கிறன். போகமுந்தி ஒன்று சொல்லுகிறன். உங்களைப் போன்ற இளைஞர்களின் பங்களிப்பில்தான் எங்கள் மண்ணின் விடிவு தங்கியிருக்கு, ஏதோ நிதானமாக சிந்தித்து செயல்படுங்கோ. சரி நான் வரட்டுமே?'' என்று ஒரு எதிர்பார்ப்புடன் விடைபெற்றுக்கொண்டுபுறப்பட இருந்த முரளி சற்று நின்று,

''செந்து சங்கர் இப்ப என் பெயர் முரளி அல்ல; அமுதன்!'' என்று கூறிவிட்டு டிரக்கை நோக்கி நடந்தான். 'டிரக்' புறப்பட்டுச்சென்றது. முரளி கையசைத்தான்; இவர்களும் அசைத்தார்கள். ஆனால் இவர்களின் அசைப்பில் உயிரில்லாத ஒரு தொய்வு காணப்பட்டது,

'டிரக்' வண்டி வளைவில் திரும்பும்வரை அதையே பார்த்துக்கொண்டிருந்தார்கள் நால்வரும். எவரும் எவருடனும் பேசவேயில்லை. நான்கு சைக்கிள்களும் வந்த வழியே திரும்பின, அவர்கள் கோயிலைத் தாண்டியபோது சுகுமார்தான் மௌனத்தைக் கலைத்தான்.

''அவன் முரளி போகிறபோது கடைசியாகச் சொன்னதை நினைக்க எனக்கு மனம் ஒரு மாதிரிக்கிடக்குதடா சங்கர்''

''எது நான் திரும்பிவந்தால் உங்களை வந்து சந்திக்கிறன் எண்டு அவன் சொன்னது தானே?''

''ம்...... அதுதான்!''

''எனக்கும் அதுதான் மச்சான் ஏதோ பயமாக்கிடக்குது'' என்று கூறிய செந்தூரன்.

''கடவுளே, அவனுக்கும் அவனோடை போறதுகளுக்கும் ஒண்டும் நேரக்கூடாது' என்று கோயிலைத் திரும்பிப் பார்த்து மனதிற்குள் வேண்டிக்கொண்டான்.

''ம்... நாங்களும் இருக்கிறமே...... சீ ..... வெட்கமாயிருக்குதடா!'' இது சங்கர். இதற்குப் பிறகு சைக்கிள்கள் உருளும் சத்தம்தான் அங்கு கேட்டது.

மறுநாள் காலையிலிருந்தே செய்தி பரவத் தொடங்கிவிட்டது.

'தீவுப்பகுதியில் இராணுவத்தின் தொடர் காவல்

(9ம் பககம் பார்க்க)

## மறக்க முடியாத உண்மைச் சம்பவம்

# இராணுவம் சுட்டு தனது உயிர் ஊசலாடிய நேரத்திலும் மகனை காப்பாற்றிய தாய்

அமைதியாக இருந்த வல்வெட்டித்துறைக்கிராமம் திடீரென அல்லோல கல்லோலப்பட்டது. துப்பாக்கிச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டன. சீறுவாணம்போல் பல முனைகளிலிருந்து 'ஷெல்'கள் வந்து விழுந்து வெடித்தன. மக்களிடையே ஒரு பதற்றநிலை தென்பட்டது. பின்புதான் வல்வெட்டித்துறையைச் சுற்றி இந்திய இராணும் சுற்றிவளைத்துள்ளது என்று தெரியவந்தது. இந்தச் சம்பவம் 1989ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி இடம்பெற்றது.

வல்வைச் சந்தியில் வாழைப்பழக் கடை வைத்திருந்த குண்டக்காவுக்கு (இராஜகுரு புஸ்பராணி) வீட்டு நினைவு வந்தது. பிள்ளைகள் தனியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று மனதில் கவலை குடிகொண்டது. அவசர அவசரமாக கடையைப் பூட்டிக்கொண்டு கொண்டல்கட்டை, தெணியம்பை வழியாக வித்தனையிலுள்ள தனது வீட்டை நோக்கி, ஓட்டமும் நடையுமாக போய்க்கொண்டிருந்தார்.

கடையைப் பூட்டிவிட்டு வீடுநோக்கி வந்த குண்டக்கா வித்தனைப் பகுதியில் பாலசுப்பிரமணியம் என்பவரை (கரடிச் சுப்பர்) இராணுவம் அவரது வீட்டிலே சுட்டு, அவர் இறந்துகிடக்கும் காட்சியை பார்த்துக்கொண்டு அப்பால் செல்லும்போது தனது மூத்த தாரத்தின் மகன் ஜீவராஜும், சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இந்தக் காட்சிகளைப் பார்த்து மயங்கி விழாக் குறையாக இருந்தபோது, குண்டக்காவுக்கு எங்கிருந்தோ வந்த சன்னம் அவர் தேகத்தில் பாய்ந்து, இரத்தம் குபுகுபு என்று பாய்ந்துகொண்டிருந்தது.

அருகில் அவரது மகன் ஜெகன்ராஜை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று எண்ணிக்கொண்டார். மகனை இறந்தவன்போல நிலத்தில் படுத்துக் கிடக்குமாறு கூறினார். பின் தனது தேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தை மகனின் தேகத்தின் மேல் தடவி மகனை தப்பச் செய்துவிட்டு குண்டக்கா இறந்துபோனார்.

இந்தியப்படைவல்வெட்டித்துறையை ஆக்கிரமித்த மூன்றாம் நாள் இராணுவக் கெடுபிடி ஓரளவுக்கு குறைந்ததைத் தொடர்ந்து கரடி சுப்பரின் வீட்டை பார்த்தபோது அந்த வீட்டுக்குள் கரடி சுப்பர் உட்பட 14 பேரின் சடலங்களுடன் குண்டக்காவும் எரியூட்டப்பட்டிருந்தார்.

தப்பியிருந்த குண்டக்காவின் மகன் ஜெகன்ராஜ் பல கஷ்டங்களை அனுபவித்துவிட்டு, பெரிய தாயாருடன் இந்தியாவுக்குச் சென்றார். அதிர்ஷ்டவசமாக குண்டக்காவின் இரு பிள்ளைகள் சுவிசிலும், இந்தியாவிலும் இருந்தபடியால் தப்பிக்கொண்டார்கள்.

குண்டக்காவின் நினைவாக இன்றும் வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள வாழப்பழக் கடையை அவரது சகோதரரான வேலும் மயிலும் நடத்தி வருகின்றார்.

உண்மையில்—

இந்திய அமைதிப்படையால் சுட்டுக்கொல்லப்பட்ட குண்டக்காவின் வாழ்க்கை இளமையில் காதலும், சோகமும், துணிவும் மிக்க வாழ்க்கையாக அமைந்திருந்தது. ஏற்கனவே திருமணம் செய்திருந்த குண்டுமணிக் தான் குண்டக்காவின் கந்தசாமி இராசகுரு என்பவரை இளமையிலே காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இவருக்கு புஸ்பராஜ், வசந்தராஜ், ஜெகன்ராஜ் மூன்று பிள்ளைகள் உள்ளனர். கணவரும் பிள்ளைகளும் குதூகலமாக வாழ்ந்துகொண்டிருந்த நேரத்தில் வாழ்க்கையில் பேரிடி விழுந்தது.

1985.ம் ஆண்டில் வியாபார நோக்கமாக குண்டக்காவின் கணவர் திருகோணமலைக்கு சென்றபோது அன்புவழிபுரத்தில் சிங்களக் காடையர்களால் பஸ் மறிக்கப்பட்டு இவருடன் சேர்ந்து நான்கு தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். மேலும் அவரிடம் இருந்த 80,000 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டன. இவரது சடலம் வல்வை எனக் குறிப்பிடப்படும் 10-ம் நம்பர் இடத்தைச் சேர்ந்த வல்வை வாசியான பாலசுந்தரம் பொன்னுச்சாமி என்பவரால் தகனம் செய்யப்பட்டு குண்டக்காவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின்புதான் குண்டக்காவின் வாழ்க்கையில் துணிவுமிக்க சம்பவங்கள் இடம்பெறுகின்றன. குண்டக்காவின் கணவரின் முதல் தார மனைவியான இ. சுபத்திராதேவியை கூட்டிக் கொண்டுவந்து தன்னோடு இருக்கும்படி வலியுறுத்தி, அவருடன் சேர்ந்த பத்து பேர் கொண்ட குடும்பத்தை நிர்வகிக்கும் நிர்வாகியாக இடம்பெற்றார். கணவரின் வாழப்பழக் கடையை தொடர்ந்து நடத்தினார். இப்படியாக துணிவு மிக்க வாழ்க்கையை மேற்கொண்டிருந்த அவருக்கு இந்திய அமைதிப்படை அவரது உயிருக்கு உலையாக வருமென எதிர்பார்க்கவில்லை.

தகவல்: சு. சுபாஸ்
(வடமராட்சி செய்தியாளர்)

## கவிமலர்

### மண்ணை மறந்த மாமனுக்கு

மண்ணை மறந்த மாமனுக்கு
மனம் வருந்தி எழுதுவது
பாரமாய் மனதில் பலவிடயம்
பகல் இரவாய் அழுத்திடவே
மனப்பாரம் இறக்கத்தான்
பாவி நான் எழுதுகிறேன்
அம்மாவும் ஆபத்தாய்
ஆஸ்பத்திரியில் இருக்கின்றா
நான் தானே பார்க்கவேணும்
வளர்ந்தவர் வேறுயார் இருக்கின்றார்
தாய்மாமன் உனக்கு
நான் சொல்லத் தேவையில்லை
துன்பம் வரும்போது
ஒருமித்து வருமென்பார்
கையிலும் காசில்லை
மடியிலும் காசில்லை
கடனுமோ ஒருவரும்
நம்பித் தரமாட்டார்
கடல்கடந்து எனக்கும்
யாருமில்லை 'டொலர்' அனுப்ப
இருந்த பெடியனும்
இயக்கத்தில் சேர்ந்துவிட்டான்
பிணைநின்றன் ஒருத்திக்கு
கொழும்பு சென்று திரும்பிவர
அவளோ எனக்கு
''சூ''க்காட்டி ஓடிவிட்டாள்
கண்டிமா நகருக்கு
கண்டிக்கோ நான்
கனவிலும் போனதில்லை
பிணைவெட்ட நான்அவளை
எப்படியும் பிடிக்கவேணும்
தனிய நான் பெண்ணொருத்தி
கொழும்புக்கு வரவேணும்
தாலிதான் கழுத்திலுண்டு
அதைத்தான் அடகுவைத்தேன்
புறப்பட்டேன் கொழும்புக்கு
கிளாலிப் பயணம்
நீ கேள்விதான் பட்டிருப்பாய்
பயணமே நீ செய்ததில்லை
ஆண்டவன் கையில் என்
உயிரைக் கொடுத்துவிட்டு
பிதாச்சுதன் போட்டு
ஏறிவந்தேன் வள்ளத்திலே
தண்ணி அடித்து
தலைமுழுகிக் கரைசேர்ந்து
ட்ரக்டறில்ஏறி, நாலுமைல்
கால்கடுக்க நான்நடந்து
கால்இடறி விழப்பார்த்து
ஆண்டவன் படாப்பாடு
நான்பட்டு ஆமிக்குக்
கதைசொல்லி நான்அலுத்து
கடவுள் புண்ணியமாய்
வந்துசேர்ந்தேன் கோட்டையிலே
கண்டான் பொலிஸ்காரன்
திறவெண்டான் சூட்கேசை
பிச்சான், பிடுங்கினான்
கேட்டான் பலகேள்வி
நானும் விடல்லை
'போ' எண்டான் கடைசியிலே
நானும் பஸ் எடுத்தேன்
முகத்துவாரம் தனைநோக்கி
கட்டினேன் மனக்கோட்டை
மாமன் எனைக்கண்டால்
கட்டி அணைத்து தலைமோந்து
வரவேற்பான்—விசாரிப்பான்
அப்பாவை அம்மாவை
உற்றாரை, உறவினரை
பிறந்த மண்ணை மறக்காது
வினவிடுவான் நிலவரத்தை
தாய்மண்ணைக் காக்க
நாம் படும் துயரை
ஒவ்வொன்றாய் கேட்டு
விம்மி விம்மி அழுதிடுவான்
என்றுதான் நான் நினைத்து
கதவைத் திறந்தப்போ
மாமிதான் நிண்டாளே
வாசற் படியினிலே
யாழ்ப்பா ணத்திலிருந்து
நான் வந்தேன் எனக்கண்டு
துள்ளிக்குதித் திட்டாள்
தீயை மிதித்ததுபோல், உள்ளே
வாவென்றும் சொல்லவில்லை
தாகம்தீர தண்ணீரும் தரவில்லை
'அவர்'தான் எங்கேயோ
போய் விட்டார் வரும்நேரம்
எனக்குத் தெரியாது, வந்தபின்
சொல்லுகிறேன் உன்விசயம்
'லொட்சில்'தான் நிக்கிறியோ?
நாளை ஞாயிறுதான் அவர்நிற்பார்
எங்கேயும் போமாட்டார்
வந்துபார் என்றுசொன்னாள்
காலையிலே நான் வருவேன்
கட்டாயம் நிற்கச் சொல்
அம்மாவும் ஆபத்தாய்
வாட்டிலே இருக்கிறாள்
லொட்சிலே நின்று நான்
சுதிபார்க்க வரவில்லை
கட்டாயம் கண்டிக்கு
நான் போய் வரவேணும்
மாமாவைக் கூட்டிச்
சென்றால் மனத்தெம்பு
என நினைத்தேன்
ஞாயிறு அதிகாலை
உனைப் பார்க்க நான் வந்தேன்
நீயோ முக்கிய விடயமாய்
வெளியே போனதாயும்
வரும் நேரம் எப்பவென்று
தனக்குத் தெரியாதாம்
சொன்னாளே பச்சைப் பொய்
மனம் நொந்துஉனை
நினைத்து வெட்கித் தலைகுனிந்து
மன ஓர்மம் துணைநிற்க
கண்டிக்குத்தனியே போய்
என் கருமம்தனை முடித்து
வந்துசேர்ந்தேன் தமிழ் ஈழம்
பிறந்த மண்ணிலிருந்து வந்த
எனைக் கண்ட உன்னவர்கள்
'புலி' எண்டு கிலிகொண்டு
தீண்டத்தகாதவர்போல் எனப்பார்த்து
எட்டி நின்று கதை சொல்லி
எனை அனுப்பி வைத்தாரே!
அழுதழுது நான் வந்தேன்
தமிழ் ஈழம் எம்மண்ணுக்கு வந்தபின்பு
விடுப்புப் பார்க்கத்தான்
நீ வருவாய் மாமியோடு
நான் உயிரோடு இருந்திட்டால்
தாய் மண்ணை மறந்த உனை
செருப் பெடுத்தடிக்க மாட்டேன்
ஈழத் தமிழச்சி நான் மரபல்ல
படலை பூட்டி கலைத்திடுவேன்
கொழும்புக்கு ஓடென்று
நீயோ அற்ப பயல்
தமிழ் ஈழம் உனக்கில்லை
எமக்குத்தான்.

—மணியன்

## பல்சுவை

★ கரையான்களில் சில 160 அடி உயரம் வரை புற்றுகளை கட்டியுள்ளுள்ளன. இந்தப் புற்றுக்கள் 11750 டன் எடையுள்ள மண்ணால் உருவாக்கப்பட்டவை. உண்மையில் இதைக் கட்டுவதற்கு 10 லட்சம் கலன் தண்ணீர் தேவைப்படுமாம். துளிகூட களி மண் இல்லாமல் கட்டப்படும் இந்தக் கட்டிடங்கள் மழை, விலங்குகளால் பாதிக்கப்படுவதில்லை. 'குயூடெர்மிஸ்' என்பதே இந்தக் கரையானின் வகையாகும். -ச. தி.

★ ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஒருவர்தான் வளர்த்த நாயை இங்கிலாந்து கொண்டு சென்று ஒளித்துவைத்திருக்கின்றார். ஜேர்மனிய ஷெப்பர்ட் அல்சேஷன் இனத்தைச் சேர்ந்த கெல்லர் என்றழைக்கப்படும் இந்நாய் இன்னொரு நாயுடன் உக்கிரமான சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது அவற்றை விலக்கிச் சென்ற மற்ற நாயின் சொந்தக்காரரைக் கடித்துக் குதறியிருக்கிறது. இதனால் இந்நாயை கொன்றழிக்கவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதனாலே இந்த நாயை இங்கிலாந்தில் கொண்டுபோய் ஒளித்து வைத்திருக்கின்றார். -தீ.

★ அமெரிக்காவை கண்டுபிடித்தவர் கிறிஸ்தோபர் கொலம்பஸ். தனது இறுதிக் காலத்தில் கடுமையான வறுமையால் இறந்தார். -ம

★ ஏ. கே. 47 துப்பாக்கியை உருவாக்கியவர் ரஷ்யரான கலாஷ்னிகோவ். இக்கைத்துப்பாக்கி முறைகேடாகப் பயன்படுத்துவது பற்றி கண்ணீர் விட்டு வருத்தம் தெரிவித்துள்ளார். போரில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இத்துப்பாக்கி சர்வசாதாரணமாக உலகின் பல நாடுகளில் அன்றாடம் கொலை. கொள்ளைக்கு பயன்படுத்துகிறது என்று வருத்தப்படுகிறார், இரண்டாம் உலகப் போரில் சண்டையிட்ட ரஷ்ய இராணுவ வீரர் டாக்டர் கலாஷ்னிகோவின் தற்போதைய வயது 76 ஆகும்.

★ ஒரு இளம் பெண்ணுக்கு கருப்பையில் 2,50,000 சினைமுட்டைகள் தோன்றுகின்றன. அதே பெண் 50 வயதை அடையும்போதுவெறும் 1000 முட்டைகள் தான்தோன்றுகின்றன.

# பெண்கள் உலகம்

இன்று சர்வதேச ரீதியில் பெண்களின் பங்கும், முக்கியத்துவமும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இன்று பெண்களின் சுவடுகள் பதியாத இடமே இல்லை எனலாம். விண்வெளியிலும், களத்திலும், புலனாய்வுத் துறையிலும், ஆய்வுகூடங்கள்

# தற்காப்புக்கலையும் பெண்களும்

லும், இன்னும் எத்தனையோ துறைகளிலும் அவர்கள் படைக்கும் சாதனைகள் ஏராளம்.

ஆனல் பெண்களுக்கு மறுபக்கம் என்றும் ஒன்றுண்டு. அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்படும் இடங்கள் அனேகம். அந்த வகையில்தான் எம் பிரதேசத்தில் பெண்கள் தற்காப்புக்கலை

ஒரு மாற்றத்துக்கு இடம் கொடுக்க முன்வருவதில்லை.

நாம் கராட்டி பழகுவதன் மூலம் எந்தவித ஆயுதமும் இன்றி எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளமுடிகின்றது. இன்று பெண்கள் கல்வி கற்பதற்காகவும், தொழில்வாய்ப்பைத் தேடுவதற்காகவும் பல இடங்களுக்கு போய்வரவேண்

டியது கட்டாய தேவையாகிவிட்டது; இந்த இடங்களிலெல்லாம் பெண்கள் துணிச்சல் மிககவர்களாக இருக்க வேண்டியுள்ளது. எம்மை எவரும் எதுவும் செய்யமுடியாது என்ற நம்பிக்கையும் துணிவும் இருக்கவேண்டும்.

அதற்காக கராட்டிக் கலையை துஷ்பிரயோகம் செய்வது என்பது அர்த்தமா

யும்கூட செய்யக்கூடாதவையாகிவிடும்.

இத்தற்காப்புக்கலை உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், நன்மையே செய்கின்றது என்பதே உண்மை. உடலை இறுக்கமாக வைத்திருக்கவும் நோய்நொடியின்றிப் பாதுகாக்கவும் உதவுகின்றது.

அதேநேரம் உளவியல் ரீதியாக ஏற்படுத்தும் மாற்றங்கள்பல. மனத்துணிச்சலையும், தன்னம்பிக்கையையும், உறுதியையும், பொறுமையையும் ஆளுமையையும்கூட இக்கலை வளர்த்துவிடுகின்றது. தனியே வெளியில் செல்லவோ இருட்டில் பயணம் செய்யவோ பயம் இருக்காது. எதையும் எதிர்கொள்ளக்கூடிய அசாத்திய துணிச்சல் ஏற்படும். எங்

களால் முடியும் என்ற தன்னம்பிக்கையும் ஆளுமையும் வரும். சோர்வையும் கவலையையும்கூட அகற்றிவிடும். இதனைக் கராட்டிபழகும் பெண்களே கூறுகின்றனர்.

முன்பு ஜப்பானிய சட்டத்தின்படி கராட்டி பழகுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனல் இன்று சட்ட அங்கீகாரம் பெற்று வளர்ந்துவிட்டது.



பழகுவதற்கு எதிராக பல விமர்சனங்கள் எழுகின்றன. பரதநாட்டியமும், விளையாட்டும் பழகவிடும் பெற்றோர் இத்தற்காப்புக்கலையைப் பழக தடை விதிப்பது தான் ஏன் என்று புரியவில்லை. சமையற்கலைக்கும் தையல் கலைக்கும் அழகியற் கலைக்கும் மட்டுமே பெண்கள் உரித்தானவர்கள் என்று வளர்ந்துவிட்ட மனப்பான்மைதான் இப்படித் தடை விதிக்கின்றதோ?

எம்மை நாமே பாதுகாப்பதற்கு மட்டுமன்றி காலாதிகாலமாக எமக்குள் வளர்க்கப்பட்டுவிட்ட 'பயம்' என்ற உணர்வை அகற்றவும் இத்தற்காப்புக்கலை துணை புரிகிறதே!

தற்காப்புக்கலை என இங்கு குறிப்பிடுவது கராட்டியைத்தான். கராட்டி பழகுவதா?... அதுவும் பெண்கள்? .. அத்தனை கண்களும் அகலத்திறக்கும்.

இதுதான் எமது சமூகத்தின் பார்வை. எத்தனையோ பலதுணிச்சலான செயல்களில் எல்லாம் பெண்கள் முன்னேறிவிட்டபோதிலும்கராட்டி பழகுவது என்றவுடன் எல்லோர் முகங்களிலும் ஒரு தயக்கம், வெறுப்பு பரவுவதை அவதானிக்கலாம். அறிவு, தேவையை உணர்த்திலும் ஊறிவிட்ட உணர்வு

காது. பழக ஆரம்பிக்கும் போது எடுக்கும் வாக்குறுதிகளுக்கேற்ப எமது உயிருக்கோ உடமைக்கோ ஆபத்து ஏற்படும்போது மட்டுமே இக்கலையைப் பாவிக்கமுடியும்.

முன்பெல்லாம் கிரிக்கெட் ஆண்களுக்குரிய விளையாட்டு என இருந்தது. ஆனல் இன்று நிலைமை மாறிவிட்டது. பெண்களும் கிரிக்கெட் விளையாடுகின்றார்கள். அதேபோலவே

**விசாலி**

கராட்டியையும் ஒரு விளையாட்டாகவே பழகமுடியும். இன்று உலகளாவிய ரீதியில் கராட்டி ஒரு விளையாட்டாக சட்ட அங்கீகாரம் பெற்றுள்ளது.

கராட்டி பழகுதல் பெண்களுக்குக்கூடாது என்ற சில தவருன கருத்துக்கள் உள்ளன. இதில் எதுவித உண்மையுமில்லை. அப்படி எந்தத் தீங்கையும் விளைவிக்காது என மருத்துவர்களும், ஆய்வாளர்களும் நிரூபித்துள்ளனர். கராட்டி பழகுவதால் தீங்கு வரும் என்பது உண்மையென்றால் பெண்கள் ஈடுபடும் விளையாட்டுக்களும், கடின உழைப்புக்களும், பழகும் நடனக்கலை

ஜப்பானில் கராட்டி தெரியாதவர்களே இல்லை எனலாம். ஜப்பான் பாடசாலைகளில் கராட்டி கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. ஆண்களும், பெண்களும் இக்கலையைப் பயில்கின்றார்கள்.

[8ம் பக்கம் பார்க்க[

# இவ்வாரம் எப்படி?

**02-07-95 முதல் 08-07-95 வரை**

**மேடம்**

காரியதாமதம் நிலவும், குடும்பத்தில் மனத்தடங்கல் இருப்பினும் பாதிப்பில்லை, தொழிலில் உற்சாகமின்மை இருக்கும், நண்பர்கள் கவலையுண்டு, பயணங்கள் தாமதமாகும், மத்திம வாரம்.

**இடபம்**

இருப்பிட அமைதியின்மையுண்டு, முயற்சி வெற்றியளிப்பது கடினம், புத்திரர் கவலையுண்டு, குடும்பத்தில் வேற்றுமையுண்டு, தொழில் லாபம் தராது. வேண்டியவரை பகைத்துக் கொள்ளலாம், பகைமை வாரம்.

**மிதுனம்**

தொழில்துறைகளில் அமைதிகுன்றுவதும் பணப்புழக்கம் மந்தமாக இருக்கும், குடும்பத்தில் வேற்றுமை நிலவும், உறவினர் உதவியுண்டு, சுபகாரியங்களில் செலவுண்டு, அமைதியற்ற வாரம்.

**கடகம்**

குடும்பத்தில் நிலவிய மௌனம் குலையும், பிரச்னைகளுக்குத் தீர்வுண்டு, தொழில் சிறப்படையும், தெய்வீக செலவினங்களுண்டு, அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர், சுமாரான நன்மை தரும் வாரம்.

**சிங்கம்**

வெளியார்ஒருவரின் தலையீடு கவலை தரும், குடும்பத்தில் இனம்புரியாத மௌனம் நிலவும், பணப்புழக்கம் பற்றுச்குறை நிலவும், காரியங்கள் வீண் அலைச்சலுண்டு, சமரச முயற்சி பயன்தராது, குறைகேட்கும் வாரம்.

**கன்னி**

குடும்ப உறவில் குழப்ப நிலையுண்டு, பெற்ருேரின் நடத்தைகள் மனஅமைதியைக் கொடுக்கும், பணநிலை திருப்தி தராது, தொழிலில் எதிர்பாராத தடங்கல் உண்டு, அமைதி குன்றிய வாரம்.

**துலாம்**

குடும்பநலனில் அக்கறை தேவை, தொழில் முயற்சிகள் தோல்வி தரும், இனசனங்கள் ஒத்துழைப்பு நல்கும், புத்திரர் பெருமையுண்டு. பொறுப்பாளிகள் சிரமமுண்டு, நன்மை தீமை கலந்த வாரம்.

**விருச்சிகம்**

குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு, மாமனர் உதவியுண்டு, தொழில் லாபம் திருப்திகரமாக இருக்கும், கலந்துரையாடல் பிரச்னைக்கு தீர்வு தரும், பணவரவுண்டு, அதிர்ஷ்டவாரம்.

**தனுசு**

தப்பபிப்பிராயம் நீங்கும், தொழிலில் முன்னேற்றமுண்டு, குடும்பநிலை அமைதியாக இருக்கும், புதிய உறவின் மூலம் சில பிரச்னைகளை சமாளிக்கலாம், சுபகாரிய செலவுண்டு, நன்மையான வாரம்.

**மகரம்**

குடும்பத்தில் சுமுக நிலை இருக்காது, தொழில் கஷ்டமுண்டு, பணியாட்கள் ஒத்துழைப்பு தரமாட்டார்கள், பணநிலை பாதிப்படையும், வீண் பகை உருவாகும், மனநிலை அமைதிதராது, துயர வாரம்.

**கும்பம்**

தொழிலில் குறைபாடு உண்டு, நினைத்ததை சாதிக்க முடியாதிருக்கும், மனப்பயம் நிலவும், சகோதரரை வெறுக்க நேரிடும், குடும்பத்தில் குறைபாடு நிலவும், உடல்நிலை பாதிப்படையும், அலைச்சலான வாரம்.

**மீனம்**

குடும்ப மகிழ்ச்சியுண்டு, இனசன பாராட்டு கிட்டும், தொழிலில் உயர்ந்த ஸ்தானம் கிட்டும், அதிகாரிகள் உதவியுண்டு, காரிய வெற்றியுண்டு, பிறரின் யோசனைக்கு கட்டுப்படவேண்டும், சிறப்பான வாரம்.

**கணிப்பு: ஜோஸ்யர்**

# மருத்துவம்

## வெந்நீர்பட்டால்

கையிலோ, காலிலோ வெந்நீர்கொட்டிவிட்டால் ஒரு வெள்ளைத்துணியை நான்கு மடிப்புளாக மடித்து அதில் கரைத்த உப்புத் தண்ணீரை விட்டு நனைத்து வெந்நீர்பட்ட இடத்தில் மேல் வைக்க வேண்டும். இப்படிச் செய்தால் வெந்நீர்பட்ட இடம் கொப்பளிக்கமாட்டாது. புண்ணுகவும்மாட்டாது.

## இருமல் (வரட்டிருமல்) தொண்டைக் கட்டு...

கசகசாவை நீரில் ஊறவைத்து கல்நீக்கியபின் கொப்பரூத் தேங்காயுடன் சேர்த்து அரைத்து பனங்கற்கண்டு சேர்த்து கொதிக்கவைத்துச் சாப்பிடவேண்டும்.

## நரம்புத்தளர்ச்சிக்கு...

வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வதக்கி உணவுடன் சேர்த்துச் சாப்பிட நரம்புத் தளர்ச்சி குணமடையும்.

தொகுப்பு:

லெஸ்லி-லவன்


# விமான தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு விமான தொடர் அம்பிலன்ஸ் இணைப்புசேவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**பயணம் பதிவு செய்யும் நேரம்:**
**காலை 9.00 முதல் மாலை 5.00 வரை**

குறிப்பு: நோயாளர்களுக்கும் வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் வாரத்தில் திங்கள், வியாழன் சேவை நடைபெறும்.

தொடர்பு:
**தர்மிசா ரவல்ஸ்**
**குமரன் பயணிகள் விடுதி**
அறை இல. 6
67, அருச்சுன வீதி, (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம்.
[ஏ 5055[




குட்டிக்கதை:

## அன்பு, அறிவு, அழகு

காட்டிலே ஒரு அழகிய மயில் வாழ்ந்து வந்தது. அது எப்போதும் தன் அழகினை மற்ற மிருகங்கள் யாவும் புகழ வேண்டும் என்று விரும்பியது. தன்னைப் புகழ்கின்ற மிருகங்களோடு அது அன்போடு பழகி வந்தது. இதை அறிந்த பாம்பும் மயிலைப் புகழ்ந்து, புகழ்ச்சியில் மயங்கிய மயில் அன்றிலிருந்து பாம்பைக் கொத்துவதை நிறுத்திற்று. ஆனால் மயிலைக் கொத்து வதற்கு பாம்பு தருணம் பார்த்திருந்தது.

அந்த அழகான மயில் ஒரு நாள் பச்சைப் புல்வெளியில் தோகை விரித்து ஆடிக் கொண்டிருந்தது. அப்போது அந்த வழியால் முயலொன்று வந்தது. முயலைப் பார்த்த மயில் என்னைப்போல அழகிய பறவையை நீ பார்த்திருக்கிறாயா? என்று கேட்ட உடனே முயல் நீ அழகிய பறவை தான். ஆனால் உனக்கு அறிவு இல்லைபோல் இருக்கிறதே என்று பதில் கூறிற்று. மயிலுக்கு உடனே கோபம் வந்தது. ஏன் அப்படிக் கூறுகிறாய் என்று கேட்டது. அதற்கு முயல் பதில் கூறிற்று; உன்னைப் புகழ்கிறவரோடு நீ நட்பாய் இருக்கிறாய். அதனால் விஷமுள்ள கொடிய பாம்புடனும் நட்பாய் இருக்கிறாய். அந்தப் பாம்பு உனக்கு ஒரு நாள் ஆபத்தையும் உண்டாக்கும். இப்படி நட்புக் கொள்வது அறிவற்ற செயல்தானே. ஆகையால் அறிவுடனும் அன்புடனும் இருந்தால்தான் அழகுக்கு பெருமை வரும்.

முயல் கூறியதை மயில் ஏற்றுக்கொண்டது. அன்றிலிருந்து அது தனது கர்வத்தையும் கைவிட்டு நல்ல குணமுள்ள பிராணிகளோடு நட்புடன் வாழ்ந்து வந்தது.

— கி. ரஞ்சன்

## விடுகதை

1. காலில்லை ஓடுவான் ஆனால் பாம்பு அல்ல. அது என்ன?

2. மரம்ஒன்று, பூ இரண்டு அது என்ன?

3. தாய் உறங்குவாள். மகள் உருளுவாள் அது என்ன?

4. கண் இருந்தும் தலையிருந்தும் முடியிருந்தும் மூளை இல்லாதவன் அவன் யார்?

5. பகலில் தொட்டுத் தொட்டுப் பார்ப்பான் இரவிலே அணைத்துக் கொள்வான் அவன் யார்?

எஸ். பிரியதர்ஷனி
கனகரத்தினம் ம. வி.

விடை:

1. கடிகாரம். 2. தென்னம்பூ, தேங்காய்ப்பூ 3 அம்மி· 4. தேங்காய். 5 கண்இமை.

## தெரிந்துகொள்ளுங்கள்

1. தற்பொழுது தமிழீழத்தில் உப்பு விளையும் இடம் எது?
2. ''புலிக்கொடி'' எந்த நாட்டின் சின்னம்?
3. ''செம்பிறை'' எந்த நாட்டின் குறியீடு?
4. சர்வதேச வங்கி அமைந்துள்ள இடம் எது?
5. சி. ஐ. ஏ. [C. I. A] ஐக்கிய அமெரிக்காவின் எந்த ஸ்தாபனத்தைக் குறிக்கும்?
6. ''இன்டர்போல்'' என்றால் எதைக் குறிக்கும்?
7. இரவு வேளைகளில் இராணுவத்தால் பயன்படும் வெளிச்சக்கூடுகள் எம்மூலகம் எரிவதன்மூலம் ஒளி பெறப்படுகிறது?
8. நாயில் வியர்வைச் சுரப்பிகள் காணப்படும் இடம் எது?

விடைகள்

1. தமிழீழத்தில் உள்ள செம்மணி என்னும் இடத்தில் 2. தமிழீழத்தின் தேசியக்கொடி. 3. அரபு நாட்டின் செஞ்சிலுவைச் சங்கம். 4. லண்டன் 5. அமெரிக்காவின் ''மத்திய உளவு'' அறியும் ஸ்தாபனம். 6. சர்வதேச பொலிஸ் ஸ்தாபனம். 7. ''பொசுப்பரசு'' உலோகம். 8. அதன் நாக்கினுள் உள்ளது.

ஆக்கம்:
க. ஜெயகயன்,
ஆண்டு 5,
யாழ். ஆரம்ப இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## போர்முரசு

தவளைக் குரலில் முழங்கினால் இங்குள்ள
தாழ்வு மறைந்திடுமோ நாலு
கவிதை எழுதிக் குவித்து விட்டால் — எங்கள்
கவலை குறைந்திடுமோ விட்டுச்
சுவருக்குள் ஆயிரம் ஆயிரம் திட்டங்கள் தீட்டிச்
சுதந்திரம் வாங்கி விடவோ — தலை
குவியக் கிடந்த செருக்களம் — ஆடிக்
குதிக்கப் புறப்படடா!

உச்சியில் நின்று விழுந்து விட்டோம் — விட
உணர்ச்சி இழந்து விட்டோம் — உயிர்
அச்சத்தினால் இங்கு சாய்ந்து விட்டோம் — வீட்டில்
அடங்கி இருந்து விட்டோம் — தெருப்
பிச்சை எடுத்து வளர்ந்து விட்டோம் — புகழ்
பேண மறந்து விட்டோம் — இந்த
எச்சில் நிலை இனி இல்லை — எனக்கொடி
ஏற்றப் புறப்படடா!

நாற்றிசை மண்ணும் கடலும் வான்மலைகளும்
நடுங்க வலம் வருவோம் - பெரும்
ஆற்றல் மிகுந்தவள் அன்னை அவள் மிசை
ஆணை எடுத்திடுவோம் — இங்கு
வேற்று நிலத்தவர் ஆட்சியெனில் அந்த
விலங்கினை உடைத்தெறிவோம் — அட
சோற்றுக்கு வாழ்ந்து சுருண்டது போதும்
சுழன்று புறப்படடா.

— செல்வி கௌரி கதிரவேல்

நாட்டின் வரலாறு

## ஜப்பான்

உலகினிலே அதிஉயர் எலக்ரோனிக் பொருட்களுக்கு பெயர்போனநாடு. டோக்கியோ இதன் தலைநகரமாகும் ஜப்பான் 3 77,765 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை கொண்டது. 12.52 கோடி மக்கள் வாழ்கின்றனர். இங்கு ஜப்பானிய மொழி பேசப்படுகின்றது. ஷிண்டோயிஸம் பௌத்த மதம், போன்ற சமயங்கள் பின்பற்றப்படுகின்றன.

1945 ஆகஸ்ட் 14இல் அமெரிக்கா நாட்டின் அடிமை நாடாகிய இந்நாடு 1952 ஏப்பிரல் முதல் ஜப்பான் ஒரு சுய அதிகாரமுள்ள நாடானது. மோட்டார் வாகனம், எலக்ரிக்கல் பொருட்கள், துணி வகைகள், காகிதங்கள் போன்ற பொருட்களின் தயா

(9ம் பக்கம் பார்க்க)

## தற்காப்புகலையும்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

ஆரம்பத்தில் ஜப்பானியர்கள் களவாகவே இக்கலையைப் பயின்றார்கள். இதனாலேயே மிகத்தீவிரமாகவும், அக்கறையாகவும், கவனமாகவும் அவர்களால் பழகமுடிந்தது. இதன் விளைவு இன்று உலகிலேயே ஜப்பான் கராட்டியில் முதலிடம் வகிக்கின்றது.

அணைகட்டியுள்ள போது தான் தண்ணி அணையை உடைத்துக்கொண்டு இன்னும் வேகமாய்ப் பாயும். இன்று எம் சமூகத்தின் பார்வை பெண்கள் கராட்டி பழகுவதற்கு அணை போடுகிறது. இவ் அணையை உடைத்து சாதாரண நீரோட்டமாக்குவதுதான் எமக்குரிய தேடல்.

முன்பு ஒரு பெண் சைக்கிள் ஓடும்போது அதிசயமாய்ப் பார்த்து மூக்கில் விரலை வைத்து அநாகரிகமாய்க் கதைத்தவர்கள்தான் இன்று சைக்கிள் ஓடத் தெரியாது என்று சொல்லும் பெண்ணை அதிசயமாகவும் கேலியாகவும் பார்க்கின்றார்கள். இதே போன்ற பரிணாம வளர்ச்சி கராட்டிக் கலைக்கும் ஏற்படுவது திண்ணம்.

இன்று பல்வேறு நாடுகளிலும் தற்காப்புக்கலை (கராட்டி) பெண்களால்மும்முரமாக பழகப்பட்டு வருகின்றது.

இவர்களுக்கு எம்பிரதேசத்துப் பெண்கள் மட்டும் குறைவா என்ன? யாழ்ப்பாணத்திலும் பெண்கள் இக் கலையை பயின்று கொண்டிருக்கிறார்கள். இது சிறு துளிதான். ஆனால் பெரு வெள்ளமாகும் காலம் மிக அண்மையில்தான்.

## சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அரண்களை 'பொடியள்' தாக்கி அழித்துவிட்டார்களாம். இராணுவத்திற்கு பலத்த இழப்பாம் என பரபரப்பாகப் பேசப்பட்டது.

அன்று இரவு அதன் முழு விபரத்தை அறிவதற்காக நண்பர்கள் நால்வரும் புலிகளின் குரல் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் தாக்குதல் விபரத்தைக் கூறிக்கொண்டிருந்த செய்தியாளர், 'இவ்வெற்றிகர அதிவேக அதிரடித் தாக்குதலில் இருபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் கப்டன் அமுதன் உட்பட நான்கு போராளிகள் வீரச் சாவடைந்தனர்......'' என்று கூறியதும் நண்பர்கள் நால்வரும் அதிர்ச்சியால் சிலையானார்கள். மேற்கொண்டு செய்தியாளர் கூறியது ஒன்றும் அவர்களின் செவிகளில் விழவேயில்லை.

ஒரு வாரம் உருண்டோடி விட்டது. இந்த ஒரு வாரமாக இந்த நண்பர்கள் நால்வரையும் மாலை நேரத்தில் நெல்லியடிச் சந்தியில் காணவே இல்லை!

ஏதோ அவர்களின் பட்டைப் ஞானம் மாறி, பழையபடி வேதாளம் முருங்கைமரம் ஏறுவிட்டால் சரி, இன்னும் ஒருபடி மேலே சென்று, அந்த நான்கு வெற்றிடங்களையும் நிரப்புவார்களேயானால் அது மன நிறைவான விஷயம்; பாராட்டப்படவேண்டியதும்கூட.

(யாவும் கற்பனை)

உலகக்கிண்ண கிரிக்கெட் ஆட்டங்கள்:

# 26 மைதானங்களில் 38 போட்டிகள் நடைபெறவுள்ளன

6வது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த வருடம் (1996) மாசி மாதம் நடைபெறவிருக்கின்றது. இந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இம்முறை ஆசியாவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தில் பிரபல்யம் வாய்ந்த ஆசிய நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளிலும் இம்முறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியை மிகச் சிறப்பாக நடாத்துவதற்கு இந்த மூன்று நாடுகளும் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பே ஆயத்த வேலைகளை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டன.

அடுத்த வருடம் மாசி மாதம் 14-ந் திகதி ஆரம்பமாக இருக்கும். மேற்படி போட்டி பங்குனி மாதம் 17-ந் திகதி வரை பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் மொத்தம் 26 மைதானங்களில் நடைபெறவுள்ளது. உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டத்தில் இம்முறைதான் உலகின் பல பாகங்களிலுமிருந்து மிகக் கூடுதலான நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன. நிர்ணயிக்கப்பட்ட 50-ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் இம்முறை மொத்தம் 38 ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றது. 12 நாடுகள் இம்முறை பங்குபற்றும் இப்போட்டி, இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடாத்தப்பட இருக்கின்றது.

அவற்றின் விபரங்கள் வருமாறு:

ஏ-பிரிவு; இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, மேற்கு இந்தியா, சிம்பாப்வே, கென்யா.

## 'தேவா'

பி-பிரிவு: பாகிஸ்தான், இங்கிலாந்து, தென். ஆபிரிக்கா, நியூஸிலாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம்.

பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளிலும் இம்முறை நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்களில்

கணிசமான ஆட்டங்களை இலங்கையிலும் நடாத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் முன்னர் திட்டமிட்டிருந்தது. ஆனால் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவும், கொழும்பில் ஏற்பட்டுள்ள பீதி காரணமாகவும், இலங்கையில் ஆக நான்கு போட்டிகளை மட்டுமே நடாத்துவதென்று மேற்படி சம்மேளனம் இறுதி முடிவு எடுத்துள்ளது. அதுவும் இலங்கை பங்குபற்றும் மொத்தம் ஐந்துபோட்டிகளில் நான்கு போட்டிகளை கொழும்பிலும், இந்தியாவுடன் இலங்கை கலந்து கொள்ளும் போட்டியை இந்தியாவிலும் நடாத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மொத்தம் 17 ஆட்டங்களும், பாகிஸ்தானில் மொத்தம் 16 ஆட்டங்களும். நடைபெறவிருக்கின்றன. அடுத்த வருடம் மாசி மாதம் 14-ந் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வுகளும் ஆரம்ப போட்டியும் இந்தியாவின் அகமதாபாத் மைதானத்திலும், இறுதி நிகழ்வுகளும், இறுதிச் சாம்பியன் போட்டியும் பாகிஸ்தானிலுள்ள லாகூர் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

உலகக் கிண்ணம் தற்போது பாகிஸ்தானிடம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

★ பட்டுக்குடை ★ ஆலவட்டம்
★ கொடி ★ வாகமாலை
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுகொள்ள
ஞானம் ஆடையகம்
34, சோதியா தெரு பெரிய கடை
யாழ்ப்பாணம். [ஏ 5054]

## ஈழக் கடற்பரப்பில்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பல்களாகும். பாரம்குறைந்த மரப்பலகைகளால் இணைக்கப்பட்டு படைக்கலங்களையும் காலாட்படையினரையும் ஏற்றியிறக்கும் பாரிய அளவினதாக இவை விளங்கின. பாய்மரத்தின் வழிகாட்டலும் வலிபலகையாளரின் உதவியினாலும் இவை இணைக்கப்பட்டன. கப்பலின் உயரமான இடத்தில், ஊதுகொம்புடன் ஒரு கட்டியக்காரன் எப்போதும் செல்லும் திசைகளை நாலாபக்கமும் அவதானித்துக்கொண்டிருப்பான். எதிரிகப்பல்கள் அல்லது வேறுவழிகளால் ஆபத்து வரும்போது இவன் தன்னிடமிருக்கும் ஊதுகுழலை எடுத்து பலமாக ஊதுவான். உடனே கப்பலிலுள்ள படையினர் விழித்துக்கொண்டு தம்மைத் தயார்நிலையில் வைத்திருப்பர். நெடுந்தூரம் குறிபார்த்து அம்பு எய்யக்கூடிய சிறந்த வில்வீரர்கள் கப்பலின் முன்பக்கத் தளத்திற்கு வந்து வரிசையாக தயாராக நிற்பார்கள்.

அதேவேளை அக்கினி அம்புகளை கணப்பொழுதில் தொடுத்து, எதிரிக் கப்பல்களை எரியூட்டக்கூடிய வில்வீரர்களும் ஒரு பக்கத்தில் தயார்நிலையில் நிற்பார்கள். இவை இப்போர்க் கப்பல்களின் சிறப்பு அம்சங்களாகும். இவற்றுடன் ஒவ்வொரு கப்பலிலும் சிறியசிறிய கட்டுமரங்களை வைத்திருப்பார்கள். ஆபத்துக் காலங்களில் அல்லது ஆழம் குறைந்த பிரதேசங்களில் படைகளை இறக்க இவற்றைப் பயன்படுத்துவர்.

ஒரு நாட்டிலிருந்துவேறொரு நாட்டிற்குப் பெருமளவில துருப்புக்களை இக்கப்பல்கள் மூலம் விரைவாக இறக்கப்பட்டன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அக்காலத்தில் இராஜராஜசோழனிடமும் (கி. பி 985 - 1014) அவர் மகன் இராஜேந்திர சோழனிடம் (1012—1044) ஏராளமான போர்க்கப்பல்கள் இருந்தன. இவை கடற்கொள்ளைக் கப்பல்களை அடக்குவதற்காகவும், கடாரம் - ஈழம் போன்ற நாடுகளைவெல்லுவதற்காகவும் பாவிக்கப்பட்டன அந்நாட்களில் இக்கப்பல்களில் கம்பீரமாகப் புலிக்கொடி பறந்துகொண்டிருந்தது.

புலிக்கொடி பறந்துவர, விரைந்து வரும் சோழக் கப்பல்களைக் கண்டால் எந்தக் கடற்கொள்ளைக் கப்பல்களும் அன்று மாயமாய் மறைந்துவிடும் அல்லது நிபந்தனையற்ற முறையில் சரணாகதி அடைந்துவிடும். அன்று ஈழத்தமிழர்கள் இந்து சமுத்திரத்தில் வெகு தொலைவுவரை சென்று மீன் பிடித்திருக்கவேண்டும். ஆனால் எந்தச் சோழக்கப்பலும் ஈழத் தமிழர்களைத் துன்புறுத்தியதில்லை. பதிலாக வழிதவறும் அல்லது பலத்த காற்றினால் அலைந்து திரியும் ஈழத்தவர்களின் கலங்களைக் காப்பாற்றி அவர்களைச் சோழவள நாட்டிற்கு அழைத்துச்சென்று உபசரித்து, திரும்பி வரும்போது நெல்மணிகளை அள்ளிக்கொடுத்து அனுப்பி வைத்தார்கள். சிலவேளை நடுக்கடலிலேயே இருபகுதியினரும் சந்தித்து. பண்டமாற்றும் செய்துள்ளார்கள். ஈழத்து முத்தும், இரத்தினமும், உணவும் சோழர்களின் கைகளில்போக, சோழவளநாட்டின் சந்தனமும். அகிலும், பட்டும் ஈழத்தமிழர் கைகளில் வரும் இந்தமுறை இரு அரசுகளாலும் தடைசெய்யப்பட்டிருந்தாலும்கூட, அவ்வப்போது இலைமறை காயாக இடம்பெற்றே வந்துள்ளன.

தமிழன் உலகின் எந்தமூலையில் இருந்தாலும் இனத்தால் ஒன்றுபட்டவன்; மலேசியாவிலுள்ள தமிழனுக்குச் சளி பிடித்தால் மட்டக்களப்பிலுள்ள தமிழன் தும்முவான். தமிழனின் இருப்பிடங்களுக்கு மட்டும்தான் எல்லைபோட முடியும். இதயங்களுக்குப் போடவேமுடியாது. இதை அன்றே தமிழர்கள் அறிந்திருந்தார்கள்.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் 'எலரா' (எல்லாளன்) என்ற பெயருடைய ஒரு தமிழரசன் சோழநாட்டிலிருந்து பல கப்பல்களில் படைக்கலங்களையும் - ஆயிரக்கணக்கான காலாட் படையினரையும் திரட்டிக்கொண்டு ஈழநாட்டின்மேல் படையெடுத்தான் அப்போது ஈழநாட்டை 'அசிலா' என்ற மன்னன் ஆண்டு வந்தான். அசிலாவை போரில்வென்ற எலரா மன்னன் 44 ஆண்டுகள் நடுநிலை தவறாது ஈழநாட்டை ஆண்டு வந்தான். இம்மன்னன் பௌத்த மதத்தைச் சாராத திராவிடனும், பௌத்த துறவிகளுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தான் [ஆதாரம் Maha Vamsa xxi,21-6)(Maha Vamsa xxii 86, xxiv4) இவனது ஆட்சியை மக்கள் முழு மனதுடன், விரும்பினர், மகாகங்கா (தற்போது மகாவலி கங்கை)வைத் தென் எல்லையாகக்கொண்ட இவனது அரசாட்சி ஈழநாட்டின் வடபகுதி முழுவதும் பரவியிருந்தது. எலராவுக்கும் துட்டகாமினிக்கும் (துட்டகைமுனு) இடையில் கடும்போர் மூண்டது. இப்போருக்கான உள்நோக்கம் பௌத்த மதத்தைச் சேராதவனான எலரா (எல்லாளன்)வை பௌத்த 'மதத்திற்குப் புறம்பான நம்பிக்கைகளைக் கொண்ட தமிழரை நாட்டிலிருந்து நீக்கினேன்' பௌத்த மதத்தின் மேன்மையை சிங்களவர் மத்தியில் நிலைநாட்டுவதாகும்.

இளைஞனான துட்டகாமினி சூழ்ச்சியின் மூலமே வயதான எலரா மன்னனை வென்றான் என்பதுவே உண்மை. ஆனால் இதை 'மகாவமசம்' பூசி மெழுகியிருக்கிறது (ஆதாரம் Geiger-Transl, பக்கம்-290)

எல்லாள மன்னனுக்கு ஆதரவாகப் போரிட்டு ஏழு தமிழ் சிற்றரசர்கள் ஓரேநாளில் தோற்கடிக்கப்பட்டதாகவும் (xxv-10) அவ்வாறு முப்பத்திரண்டுபேர் தோற்கடிக்கப் பட்டதாகவும் அவர்கள் அநேகமாக எல்லாளனின் படையணிகளின் தளபதிகளாக இருக்கலாமென்றும் மகாவம்சம் கூறுகிறது.

எல்லாளன் கொல்லப்பட்டதும் துட்டகாமினியால் அதன்பின் தன்மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. நீதிவழுவாது நீண்டகாலம் செங்கோலோச்சிய ஒரு மாமன்னனை சூழ்ச்சியினால் கொன்றுவிட்டேனே என்று மனம் வருந்திய துட்ட காமினி, எலரா மன்னன் இறந்த இடத்திலே அவனுடலைத் [தீயிட்]டுக் கொளுத்தி' அங்கே ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பி, அதனை அனைவரும் வழிபடவும் ஏற்பாடு செய்தான். மகாவம்சத்தின் ஆசிரியரான மகாநாமன் என்ற பிக்கு கி. பி. 6ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அவருடைய காலத்திலும் ஈழநாட்டு மன்னர்கள் இந்த நினைவுச் சின்னத்திற்கு அருகில் செல்லும்போது பயபக்தியுடன் அமைதியாகச் செல்லும் வழக்கம் இருந்ததாக அவர் எழுதுகிறார். இவ்வழக்கம் கி.பி. 1946ம் ஆண்டுவரை தொடர்ந்தது' ஆனால் 1946ல் சிங்களபுதைபொருள் ஆராய்ச்சியாளரான பரணவிதான என்பவன் அனுராதபுரத்தில் பலகாலம் ஆராய்ச்சி செய்து. அது எல்லாளனின்சமாதியல்ல துட்டகைமுனுவின் சமாதியே என்று துவேசத்தனமான ஆராய்ச்சி முடிவை வெளியிட்டான். அதன்பின் எவரும் அச்சமாதிமுன் தலைவணங்குவதில்லை.

வரலாற்றின் வழிகாட்டி மூலம் சோழர்களின் காலம் பொற்காலம்எனப்பட்டாலும் அதற்கும் முற்பட்ட சங்க காலத்தில் (கி. மு. 150 அளவில்) நடந்த எல்லாளன் வரலாற்றில், தமிழர்கள் இந்து சமுத்திரத்தினூடாக வந்து, ஈழமண்ணில் எவ்வளவு சிறப்பாக ஆட்சிபுரிந்துள்ளார்கள்

**இ. முரளிதரன்**

என்பதையும் நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்கமுடியாது.

இலங்கை மண்ணில் இனத்தீ இன்று மட்டுமல்ல, 2000 வருடங்களுக்கு முன்பே கொழுந்துவிட்டு எரிந்தது என்பதற்கு எல்லாளன் வரலாறே தக்க சான்றாகும். அது மட்டுமல்ல; இந்துசமுத்திரப் பிராந்தியத்திலுள்ள சிறிய நாடான ஈழத்திலும் அதன் கடற்பரப்பிலும், பரம்பரை பரம்பரையாகத் தமிழர்களின் வீரக்கொடியான புலிக்கொடியே பட்டொளி வீசிப் பறந்து வந்திருக்கிறது. ஈழக் கடற்பரப்பில் ஆழக் காலூன்றிய சோழர்கள் வழியில் இன்று... மானத்தமிழ் மறவன் — வீரப்பெருந் தலைவன் பிரபாகரன் தலைமையிலே, கடற்புலிகள் என்ற வேங்கைக் கடல் வீரர்கள், சூசை என்ற தளபதியின்கீழ் அணிதிரண்டு நிற்பது எத்தனை பொருத்தமானது?

(தொடரும்...)

# இஸ்ரேலுடனான தூதரக உறவை மீண்டும் ஆரம்பிக்க முடிவு

(கொழும்பு)

இஸ்ரேலுடன் தூதரக உறவை மீண்டும் இலங்கை ஆரம்பிக்கவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா விரைவில் அமைச்சரவை உறுப்பினர்களுடன் ஆராயவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து விரைவில் இதுகுறித்து அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளதாகவும் கதிர்காமர் தெரிவித்தார்.

இஸ்ரேலுடன் தூதரக உறவை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக அரசு ஏற்கனவே இணக்கப்பாடொன்றுக்கு வந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

இஸ்ரேலுடனான உறவை இலங்கை அரசு மீண்டும் ஆரம்பிப்பதை அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வருகின்றது.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் லீக் என்னும் அமைப்பு இஸ்ரேலுடனான உறவை வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. -கி

## ஒரு போதும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கக் கூறி அதனை அவர் ஏற்றுக்கொள்கிறார். கடந்தவாரம் சிங்களவர் மத்தியிலுள்ள நீதிபதிகள், பேராசிரியர்கள், சட்டவல்லுனர்கள், வைத்தியர்கள், அதிகாரிகள் உட்பட 26 ''கல்விமான்கள்'' கையெழுத்திட்டுச் சந்திரிகாவிற்கு அனுப்பிவைத்த மகஜரில் சமஷ்டித் தீர்வு இலங்கையை நாசமாக்கிவிடும் என்றும். புலிகளை அழித்தொழிப்பதன் மூலம் ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்பி ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இப்படிச் சிங்களப் புத்திஜீவிகள் கனவுலக யதார்த்தத்திற் சஞ்சரிக்கின்றனர். கனவுலகக் கதாநாயகி சந்திரிகாவும் இதனை ஏற்று செயற்படுகிறார். மொத்தத்தில் சிங்களத் தலைவர்களும், புத்திஜீவிகளும் நனவுலக யதார்த்தத்திற்கு மாறாக கனவுலக யதார்த்திற் சஞ்சரிக்கின்றனர் இவர்கள் பாமரச் சிங்கள மக்களையும் அப்படி ஒரு கனவுலக யதார்த்தத்திற் சஞ்சரிக்கச் செய்கின்றனர்.

பொதுவாக சிங்கள மக்கள் சமாதானத் தீர்வுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக பரவலான ஒரு நம்பிக்கை உண்டு. ஆனால் உண்மை அதுவல்ல. சிங்கள மக்கள் ஐ.தே.க ஆட்சியில் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகினர். அவர்கள் ஐ. தே. க. மீது இருந்த வெறுப்பினால் அதனை வீழ்த்துவதற்கு அவர்கள் சந்திரிகாவிற்கு வாக்களித்தார்களே தவிர சமாதானத் தீர்வுக்கு வாக்களிக்கவில்லை. அப்படி ஒரு தீர்வையும் சந்திரிகா தேர்தலில் முன்வைத்திருக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு நிறைவான சமஷ்டித்தீர்வு கொடுக்கலாமா இல்லையா என்று ஒரு சர்வசன வாக்கெடுப்பை சிங்கள மக்கள் மத்தியில் நடத்தினால் அவர்கள் தீர்வுக்குச் சாதகமாக வாக்களிப்பர் என்றில்லை. ஏனெனில் நெடுங்காலமாக அவர்கள் தமிழின எதிர்ப்புடன் வளர்க்கப்பட்டுள்ளார்கள். அவர்களது மனநிலையை சிங்களத் தலைவர்களும் புத்திஜீவிகளும் மாற்றத் தயாராக இல்லை. முதலில் சிங்கள உயர்குழாத்தின் மனம் மாறவேண்டும். அதன்பின்பு அவர்கள் அனைவரும் இணைந்து பாமரச் சிங்களமக்களின்மனங்களை மாற்ற வேண்டும். இது சாத்தியம் இல்லை.

இப்போது சிங்களத் தலைவர்கள், சிங்கள புத்திஜீவிகள், சிங்களப் பாமரர் ஆகிய அனைவரும் தமிழருக்கு எதிராக ஒரு நேர்கோட்டிற்தான் நிற்கின்றனர். சிங்களவரின் நீதிமான் ஒருவனும் இல்லை. பாமரச் சிங்கள மக்கள்பாவம். அவர்களுக்கு உண்மை தெரியாது. உயர்குலத்தின் பொய்யை மெய்யென நம்புகின்றனர்.

ஒரு காலத்தில் தமிழருக்கு கொழும்புத் தலைமை இருந்ததிற்குப் பதிலாக இப்போது கொழும்பு, யாழ்ப்பாணம் வரவேண்டிய அளவிற்கு நிலைமைதலைகீழாய்மாறியுள்ள ஒரு நனவுலக யதார்த்தம் இருக்கையில் சிங்கள உயர்குழாமோ கனவுலக யதார்த்தத்திற் சஞ்சரிக்கின்றது.

இந்த நனவுலக யதார்த்தத்திற்கும், கனவுலக யதார்த்தத்திற்கும் இடையிலான முரண்பாடும் இடைவெளியும் தான் இலங்கையின் இன்றைய அரசியற் பிரச்னைக்கான விளக்கமாகும்.

ஒருவர் கனவுலகிலும், இன்னொருவர் நனவுலகிலும்நின்று கொண்டு பேசமுடியுமா? இட்டு நிரப்பமுடியாத நனவுலக, கனவுலக இடைவெளியின்மத்தியில்பேச்சுவார்த்தை மூலமான சமாதானத் தீர்வுக்கான வாய்ப்பு எதிர்காலத்திலும் இல்லையென்றே கூறலாம்.

சமாதானத்தீர்வு விருப்பத்திற்கு உரியது; ஆனால் அதைப் பற்றிப் பேசுவது என்பதே இலங்கையின் அரசியல் யதார்த்தத்தில் ஒரு கற்பனைதான்.

கற்பனைகளுக்கும், கனவுலகங்களுக்கும் அப்பால் நிஜயதார்த்தம் இரத்தமும் தசையுமாய் உள்ளது.

## நாட்டின் வரலாறு

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ரிப்பில் முன்னணி வகிக்கிறது. விவசாயத்திலும் குறிப்பிடத்தக்கது. தங்கம், வெள்ளி மற்றும் செம்புச் சுரங்கங்கள் உள்ளன. சுற்றுலாவிலும் பாரிய வருமானத்தை பெறுகின்றது.

நாட்டின் தலைவர்:- மன்னர் முகிஹிடோ.

பிரதமர்:- கோமிச்சி அராயாமா.

## அமெரிக்கா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் அமெரிக்கா பின்னணியில் நிற்க, இந்தியாவோடு மூன்று போர்களை நடத்தியது. இதனால் 1971ம் ஆண்டு பாகிஸ்தான் உடைந்து பங்களாதேசம் உருவாகியது. இந்த நேரத்தில் பாகிஸ்தானின் விமானப்படையின் மாஜித் தளபதி நூர்கான் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவை பின்வருமாறு எடுத்துரைக்கிறார்;

''இப்போதுள்ள மேற்குப் பாகிஸ்தானை இந்தியா ஒரு வழி ஆக்கியிருக்கும். அமெரிக்கா தலையிட்டுக் கண்டித்ததால் அதோடு நின்றது'' என்றார். 1965 ல் போர் நடந்தது. மூன்று போர்களையும் பாகிஸ்தான்தான் ஆரம்பித்து வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் நசீருல்லபாபர் ''யாரும் கவலைப்படத் தேவையில்லை. இந்தியா நிச்சயம் தாக்கப்போவதுகிடையாது. நாம் எப்படிப்பட்ட பதிலடி தொடுப்போம் என்று இந்தியாவுக்குத் தெரியும்'' என்று ஒரு கட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனால் பாகிஸ்தான் அமெரிக்காவின் F 16 ரக போர் விமானங்களுக்குப் பதிலாக ரஷ்யா, பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடுகளிலிருந்து விமானங்கள் வேண்டுவதற்கு திட்டங்கள் வகுத்துள்ளன என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் அல்டாம் சபான் மிரானி தெரிவித்தார்.

பாகிஸ்தான் அமெரிக்காவிடம் கொள்முதல் செய்ய இருந்த F 16 ரக 38போர்விமானங்கள்வாங்காத பட்சத்தில் ரஷ்யாவிடமிருந்து எஸ். யூ. 27, பிரான்சிடமிருந்து மிராஜ், சுவீடனிடமிருந்து 'கிரிப்பின்' விமானங்கள் வாங்குவதுபற்றி பரிசீலனை செய்ய இருக்கிறதாம். அமெரிக்காவின் F 16 ரக விமானத்துக்குச் சமமான சுப்பர்-7 விமானம் உற்பத்தி செய்வதுபற்றிக் குறித்து சீனாவுடன் ஒத்துழைப்பில் ஈடுபட்டுள்ளது. இந்தத் திட்டம் 1997/98ல் பூர்த்தியாகிவிடும்.

உலக அரங்கில் பாகிஸ்தான் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்று ஒரு சாராரும், அணுகுண்டு தயாரிப்பை நிறுத்தி அமெரிக்காவுடன் மீண்டும் உறவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறுவோரும் இன்று உள்ளனர். பாகிஸ்தான் எதைக் கடைப்பிடிக்கும் என்று காலம் தான் பதில்கூறவேண்டிவரும்.

- மகரம்

### அடுத்தவாரம்...

மு. திருநாவுக்கரசு எழுதி வரும் தீவுகளின் இராஜ குமாரி எப்படி இந்து சமுத்திரத்தின் பிச்சைக் காரியானாள் என்ற தொடர்கட்டுரை அடுத்த வாரம் இடம் பெறும்.

**இயற்கை வளம் எங்கள் செல்வம்**
**இயன்ற மட்டும் பேணுவோம் வாரீர்**

# தோட்டத் தொழிலாளரிடமிருந்து பாதுகாப்பு நிதி அறவிட முடிவு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு நிதிக்காக பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த இரண்டு லட்சம் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளத்தை அறவிட அரசு தீர்மானித்துள்ளது

தோட்டத்துறையிலிருந்து இதன்மூலம் இரண்டு கோடி ரூபாவை திரட்டமுடியுமெனவும் அரசு திட்டமிட்டுள்ளது. பாதுகாப்பு நிதிக்கு அரசு தோட்டத் தொழிலாளர்களை வற்புறுத்தியே இந்த நிதியை பெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை பாதுகாப்பு நிதிக்கு தென்பகுதியிலுள்ள பாடசாலை ஆசிரியர்களும் தனியார் மற்றும் அரச திணைக்களங்கள் போக்குவரத்து சபை ஊழியர்களிடமிருந்தும் அரசு வற்புறுத்தலின்பேரில் பாதுகாப்பு நிதியை திரட்டி வருவதாகவும் பலர் கூறியுள்ளனர்.

அமைச்சர்கள் அமைச்சின் செயலர்கள், அரச நிறுவன, திணைக்கள தலைவர்கள் உயர் அதிகாரிகளும் 4 மாதத்திற்கு ஒருமுறை தங்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்கவேண்டுமென அரசு கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளதும் தெரிந்ததே. -சி

பிரபா விவகாரம்

# நடவடிக்கை மேற்கொள்ள 2 மாதங்கள் செல்லும்

(கோழும்பு)

''ராஜிவ்காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக, விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இன்னும் இரண்டு மாதங்கள் ஆகும்''

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

''விடுதலைப்புலிகளிடம் விமானங்களைத் தாக்கும் ஏவுகணைகள் இருப்பது, இந்தியாவுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினர். வி-சி

## தமிழ் கட்சிகளுடன் அரசு பேச்சுவார்த்தை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் நேற்று அரசு பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகவும், தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் இப்பேச்சுவார்த்தைஇடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தையில் ஈ. பி டி. பி., புளொட், ரெலோஆகியகுழுக்கள்கலந்து கொண்டதாகத் தெரிய வருகிறது. -ரி-சி

# வடபகுதி நோக்கி 3 கப்பல்கள் புறப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு மூன்று கப்பல்கள் அடுத்த வாரமளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேரும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவுப் பொருள்களை கொழும்பிலிருந்து ஏற்றிக்கொண்டு 'லங்கா கல்யாணி' என்ற கப்பல் புறப்பட்டு நாளை திங்கட்கிழமை, பருத்தித்துறை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கொழும்பில் மண்ணெண்ணை பரல்களை ஏற்றிக்கொண்டிருக்கும் 'மாகோ' நாளை திங்கட்கிழமை வடக்கு நோக்கி புறப்படும் என்று கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு கிடைத்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தில் 1,950 மெற்றிக் தொன் கோதுமை மாவை ஏற்றிக் கொண்டு ஹபரண கப்பலும் நாளை திங்கட்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (170 சி)

மண்டைதீவு தாக்குதலில்

# இறந்த படையினர் தொகை 110 ஆக அதிகரிப்பு

(மணிலா)

மண்டைதீவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் இறந்த இராணுவத்தினரின் தொகை நூற்றிப்பத்தாக அதிகரித்திருப்பதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இவர்களில் மூவர் அதிகாரிகள் தரத்திலானவர், நால்வர் இராணுவ சிவிலியன்கள், ஏனையோர் படையினர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் இறுதிக் கிரியைகள், நேற்று நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. ஙி-சி

## கண்டெடுக்கப்பட்டது

திறப்புக்கோர்வை ஒன்று வண்ணார் பண்ணை சிவன் கோவில்வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

டாக்டர் பாவிக்கும் 'ஸ்ரெதஸ்கோப்' ஒன்று கஸ்தூரியார் வீதி, வின்ஸர் சந்திக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுநாயக்கா குண்டுவெடிப்பு

# நான்கு தமிழரை பொலிஸார் தேடுகின்றனர்

[கொழும்பு]

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் கடந்த மாதம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக நான்கு தமிழ் இளைஞர்கள் பற்றிய விபரங்களை தருமாறு பொலிசார் பொதுமக்களிடம கேட்டுள்ளனர்.

சோமசுந்தரம் ரவீந்திரன் வெள்ளவத்தை கனல்லேனைச் சேர்ந்தவர், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெகந்நாதன் - வெள்ளவத்தை லேனில் வீட்டு அறையொன்றில் வாடகைக்கு தங்கியிருந்தார். தெகிவளை கம்பல் பிளேஸில் வயோதிபப் பெண் ஒருவரின் வீட்டில்தர்மலிங்கம் என்பவர் தங்கியிருந்தார். நான்காவது சந்தேக நபரின் பெயர் அரநாதன் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு பேரும் தற்போது கொழும்பில் தலைமறைவாக தங்கியிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். -சி

# ஏறாவூரில் மேலும் இரு முஸ்லீம்கள் சூட்டுக்குப்பலி

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் இந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகி மேலும் இரு முஸ்லிம் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இறந்த இருவரும் மாமன், மருமகன் உறவு முறையானவர்கள். நேற்று முன்தினம் இடம்பெற்ற இக்கொலைக்கான காரணம் உடன்தெரியவராதபோதும் இதற்குப் பொலிஸாரே காரணமெனக் கூறப்படுகிறது.

ஏறாவூரில் கடந்த செவ்வாய்க்கிழமை பெண்ணொருவரும் அவரது பெருமகளும் படுக்கையில்வைத்து வெட்டிக் கொல்லப்பட்டதையடுத்து அப்பகுதி முஸ்லிம் மக்கள் பொலிஸாரே இக்கொலைகளைப் புரிந்ததாகக் கூறி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை தாக்கி அங்கிருந்த 30 பொலிஸாரை படுகாயப்படுத்தியமை தெரிந்ததே. (கி-சி)

# 9 ராணுவ முகாம்கள் கிழக்கில் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை ஒன்பது இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

இறுதியாக படுவான்கரை உன்னிச்சை இராணுவ முகாமும் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளது. குருமன்வெளித்துறை பொலிஸ்காவலரணும் அகற்றப்பட்டுள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகமேற்கொண்டு வரும் தாக்குதல்களையடுத்தே அடுத்தடுத்து இந்த படைமுகாம்கள் மூடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (கி-சி)

# மண்டைதீவிலிருந்து ஷெல், கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவு இராணுவத்தினர் நேற்றுக் காலை தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

மீனவர்கள் உடனே கட்டுமரங்களிலிருந்து கடலில் பாய்ந்ததால் தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கரை சேர்ந்தனர்.

இதேவேளை நேற்றுக் காலை மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இச் ஷெல்களில் ஒன்று குருநகர் தொடர்மாடி பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகவும் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

## போரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

படைத் தளபதி பசில் குணசேகரா, முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ருத்ரா ராசசிங்கம் உட்பட பலர் இந்தச் சபையில் அங்கம்வகிக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. கி-ம-சி

## கப்பல் ஒப்பந்தம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின்போது வாக்குறுதியைக் கொடுப்பதும் பின் அவற்றை நிறைவேற்றுது விடுவதும் மாறி மாறி வரும் அரசாங்கங்களின் வழக்கமேயானாலும் தொழிலாளர்கள் அதை சகித்துக்கொண்டு போராட்டத்தில் இறங்காது இருக்க முடியாது சிறிலங்காவிலுள்ள சகல பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் இவ்வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளன. ஆனல் வழமைபோல் . ஒரு முட்டுக்கட்டை. அதுதான் தன்னைப் பெருந்தலைவர் என்று கூறிக்கொள்ளும் தொண்டமான் வேலைநிறுத்தத்தில் தனது சங்கம் ஈடுபடாது என்று கூறிவிட்டமையாகும்.

## பதவி உயர்வு பரீட்சை

[மானிப்பாய்]

அரசாங்க, மாகாண அரசாங்க கணக்குப் பதியுனர் சேவையில் வகுப்பு II, தரம் 'அ'வில் உள்ள உத்தியோகத்தர்களை I க்கு பதவி உயர்த்துவதற்கான தகவுத் திறன் பரீட்சை இம்மாதம் 8ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்களுக்கு அதன் பிரதி கொழும்பு பரீட்சைத் திணைக்கள தரவு நிரல்படுத்தல் கிளையினல் வழங்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் யாழ். செயலகத்திற்கு தெரிவித்துள்ளது. (71-சி)

## தெகிவளையில் நேற்று

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாங்கி சேதமானது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்பிரலின்பின் கொழும்பில் ஐந்துக்கு மேற்பட்ட குண்டுகள் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. —ரி-சி

# அளவை பகுதியில் 5 சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

அளவை பகுதியில் பொலிஸார் 5 இனந்தெரியாத ஆண்களின் சடலங்களை மீட்டு எடுத்துள்ளனர். அப்பகுதியிலுள்ள ஏரியொன்றிலிருந்து இச்சடலங்கள்கண்டுபிடிக்கப்பட்டன.

35 வயதுக்குட்பட்டோரின் சடலங்களே இவ்வாறு காணப்பட்டன. இச் சடலங்கள் மேலாடையின்றி இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது, வெவ்வேறு இடங்களில் கொல்லப்பட்டதாக கூறப்படும் இந்த இளைஞர்களின் சடலங்கள் அளவைப பகுதியில் போடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சடலங்கள் அடையாளம் காண்பதற்காக குருநாகல் ஆஸ்பத்திரியில் வைககப்பட்டுள்ளன, ரி-சி

★ வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
★ கர்ப்ப தாய்மார்களுக்கும்
★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
★ போசாக்கு குறைவான குழந்தைகளுக்கும்

போசாக்கு நிறைந்த
★ ஜீவாகாரம் ★
[இது ஓர் அண்ணா தயாரிப்பு] (ஏ-5059)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில், மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு யூலை மாதம் 2-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Postoffice Sri Lanka under Lic enc Number B / 1633613.